பாம்பாட்டிச் சித்தர்



1. தெளிந்து தெளிந்து தெளிந்து ஆடுபாம்பே சிவன்

சீர்பாதங்கண்டு தெளிந்து ஆடுபாம்பே!

ஆடுபாம்பே, தெளிந்து ஆடுபாம்பே, சிவன்

அடியினைக் கண்டோமென்று ஆடுபாம்பே!

பொருளுரை :

சிவபெருமானின் பெருமை பொருந்திய திருவடிகளைக் கண்டோம் என்று பாம்பே! நீ ஆடுவாயாக. சிவபெருமானின் திருவடிகளை நீ கண்டுவிட்டால் தெளிவு பிறக்கும். எனவே, நீ மகிழ்ச்சியுடன் ஆடுவாயாக.

சொற்பொருள் :

சீர்பாதம் - பெருமை பொருந்திய சிவபெருமானின் திருவடிகள். (பாம்பு என்பது குண்டலினி சக்தியின் உருவகம்)

2. நீடுபதம் நமக்கென் றுஞ் சொந்தம் என்றே

நித்தியம்என் றே பெரியய முத்தியென்றே

பாடுபடும்போதும் ஆதிபாதம் நினைந்தே

பன்னிப்பன்னிப் பரவிநின்று ஆடுபாம்பே!

பொருளுரை :

இறைவனின் நீண்ட திருவடிகள் நமக்காகவே உள்ளன. அவை என்றும் நிலையானவை. அவை வீடுபேறு அளிப்பன என்பனவற்றை முயற்சி செய்யும்போதே தெளிந்து கொள்ள வேண்டும்.

எனவே, எப்போதும் ஆதியான அத்திருவடிகளை நினைத்தபடியே பலமுறை வாழ்த்தியபடியே, பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

நீடுபதம் - நீண்ட திருவடிகள், நீடித்த இன்பம் தரும் இறைவனின் திருவடிகள் என்றாலும் பொருந்தும். முத்தி - வீடுபேறு. ஆதி - இறைவன்.

3. பொன்னில்ஒளி போலஎங்கும் பூரணமதாய்

பூவின்மணம் போலத் தாங்கும் பொற்புடையதாய்

மன்னும்பல உயிர்களில் மன்னிப் பொருந்தும்

வள்ளலடி வணங்கிநின்று ஆடுபாம்பே!

பொருளுரை :

பொன்னின் ஒளி பொன்னைவிட்டுப் பிரியாமல் இருப்பதுபோல, உலகைவிட்டு இறைவன் பிரியமாட்டார்.

பருவம் வரும்போது பூவில் நறுமணம் வந்து பொருந்துவதுபோல, நம் மனப்பக்குவம் கண்டே அவரும் வெளிப்படுவார். பல்வேறு உயிர்களில் இறைவன் நிலைபெற்றுள்ளார். அத்தகைய வள்ளலின் திருவடிகளை வணங்கி பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

பூரணம் - முழுமை. மன்னும் - நிலைபெறும்.

4. எள்ளில் எண்ணெய் போலஉயிர் எங்கும் நிறைந்த

ஈசன்பத வாசமலர் எண்ணி பெண்ணியே

உள்ளபடி அன்புபத்தி ஓங்கி நிற்கவே

ஒடுங்கி அடங்கித் தெளிந்து ஆடுபாம்பே.

பொருளுரை :

எள்ளுக்குள் நிறைந்திருக்கும் எண்ணெய் போன்று, உயிரெங்கும் நிறைந்த ஈசனின் திருவடி மலர்களை நினைத்து, உண்மையான அன்பும் பக்தியும் பெருகி நிற்கும்படி அடக்கமுடன் தெளிந்து பாம்பே! நீ ஆடுவாயாக.

எள்ளைச் செக்கிலிட்டு ஆட்டினால்தான் எண்ணெய் புலப்படும். அதுபோல, மனம் பக்குவப்பட்டதால்தான் இறைவனைக் காண இயலும் என்பது கருத்து.

சொற்பொருள் :

ஈசன் - இறைவன். ஓங்கி - உயர. ஒடுங்கி - பணிந்து.

5. அண்ட பிண்டம் தந்த எங்கள் ஆதிதேவனை

அகலாம லேநினைந் தன்புடன் பணிந்து

எண்திசையும் புகழ்ந்திட ஏத்தி யேத்தியே

ஏகமன பாகநாடி யாடு பாம்பே.

பொருளுரை :

அண்டம், பிண்டம் - இவ்விரண்டையும் ஒன்றாக இணையும்படி படைதடத எங்கள் ஆதிதேவனை நீங்காமல் நினைந்து அன்புடன் பணிந்து எட்டுத் திசைகளும் புகழும்படி வாழ்த்தி அவனை மட்டுமே எருமனதாக நினைத்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

அண்டம் - உலகம். பிண்டம் - உடல். ஆதிதேவன் - .இறைவன். இறைவன் முதலில் தோன்றியமையால் அவனை ஆதிதேவன் என்றார். ஏகம் - ஒன்று. ஏத்தி - வணங்கி.

6. சோதிமய மானபரி சுத்த வஸ்துவைத்

தொழுது அழுது அரற்றித் தொந்தோந் தோமெனவே

நீதிதவ றாவழியில் நின்று நிலையாய்

நினைந்து நினைந்துருகி யாடு பாம்பே.

பொருளுரை :

சோதி வடிவில் விளங்கும், மிகவும் தூய்மையான அறைவனைத் தொழுது, அழுது அரற்றி, நீதி மாறாத வழயில் நின்று ஒழுகி, அப்படியே நிலையாக இருந்து, நினைந்து நினைந்து உருகித் ''தொந்தோம் தோம்'' என்று அழகிய ஒலியெழ பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள்:

சோதி - ஒளி. பரிசுத்தம் - தூய்மை. வஸ்து - பொருள், இங்கு இறைவனைக் குறித்தது. தொழுது - வணங்கி. தொந்தோம் தோம் - ஒலிக்குறிப்பு.

7. அருவாயும் உருவாயும அந்தி யாயும்

அந்தமாயும் ஒளியாயும் ஆகம மாயும்

திருவாயுங் குருவாயுங் சீவ னாயும்

செறிந்தவஸ் துவைப்போற்றி யாடு பாம்பே.

பொருளுரை :

உருவம், உருவம் இல்லாமை - இவ்விரண்டுமாகவும், இருளாகவும், ஒளிளாகவும், வேதமாகவும், செல்வமாகவும், குருவாகவும், சீவனாவும் எங்குமாய் எல்லாமாய் நிறைந்த அருப்பொருளைப் (கடவுளை) போற்றி பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

அருவம் - உருவம் இல்லாத. அந்தி - இருள். ஆகமம் - வேதம். செறிந்து வஸ்து - எல்லாமாய்த் திகழ்கின்ற இறைவன்.

8. சுட்டிக்காட்ட ஒண்ணாதபாழ் சூனி யந்தன்னைச்

சூட்சமதி யாலறிந்து தோஷ மறவே

எட்டிப்பிடித் தோமென் றானந்த மாகப்பை

எடுத்து விரிந்துநின் றாட பாம்பே.

பொருளுரை :

சுட்டிக்காட்ட முடியாத பாழாகிய வெளியில் சூனியமாகவே உள்ள பரம்பொருளை சூட்சும அறிவினால் அறிந்து கொண்டு, குற்றம் அனைத்தும் நீங்கவே எட்டிப் பிடித்தோம் என்று, ஆனந்தமாக உன் பையை (படத்தை) எடுத்து விரித்து பாம்பே, நீஆடுவாயாக.

சொற்பொருள் :

ஒண்ணாத - இயலாத. சூனியம் - ஒன்றுமில்லாத. சூட்சமதி - நுண்ணறிவு. தோஷம் அற - குற்றம் நீங்க. பை – படம்.

9. எவ்வுயிரும் எவ்வுலகும் ஈன்று புறம்பாய்

இருந்திரு விளையாட் டெய்தியும் பின்னர்

அவ்வுயிரும் அவ்வுலகும் ஆகியு நின்ற

ஆனந்த வெள்ளங்கண் டாடு பாம்பே.

பொருளுரை :

அனைத்து உயிர்களையும், உலகங்களையும் படைத்து, அவற்றுக்குப் புறத்தே இருந்து, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் - என்னும் ஐந்து தொழில்களாகிய திருவிளையாட்டை நடத்த, பின்னர் அவ்வுயிரும், அவ்வுலகும் தானாகவே இருக்கும் ஆனந்த வெள்ளமாகிய இறைவனைக் கண்டு பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஈன்று - படைத்து. திருவிளையாட்டு - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்கள். சஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்பர் வடநூலார்.

குரு வணக்கம்

10. சாற்றுமுடல் பொருளாவி தத்த மாகவே

தானம் வாங்கி நின்றஎங்கள் சற்கு ருவினைப்

போற்றி மனம் வாக்குக்காயம் மூன்றும் பொருந்தப்

புகழ்ந்து நின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

உடல், பொருள், ஆவி என்னும் மூன்றையும் தத்தாகத் தானமாகப் பெற்ற எங்கள் சற்குருவை வணங்கி மனம், வாக்கு, எடல் ஆகிய மூன்றினாலும் அந்த வழிபாடு வெளிப்பட, விருப்பமுடன் புகழ்ந்து நின்று பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

வாக்கு - சொல். காயம் - உடல்.

11. பொயம்மதங்கள் போதனைசெய் பொய்க்கு ருக்களைப்

புத்திசொல்லி நன்னெறியிற் போக விடுக்கும்

மெய்ம் மதம்தான் இன்னதென்றும் மேவ விளம்பும்

மெய்க்குருவின் புகழ்போற்றி ஆடாய் பாம்பே.

பொருளுரை :

பொய்யான கொள்கைகளை மக்களிடையே போதனை செய்யும் பொய்க் குருமார்களைப் புத்தி சொல்லி மாற்றி, நல்ல வழியில் போகுமாறு செய்யும் உண்மையான கொள்கை இதுதான்

என்று நாம் விரும்புமாறு சொல்லும் மெய்க்குருவின் திருவடிகளைப் போற்றிப் பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

பொய்ம்மதங்கள் - பொய்யான கொள்கைகள். மதம் என்பது இங்கு கொள்கையைக் குறிக்கும். மெய்தம்மதம் - நல்ல. உண்மையான கொள்கை. மேவ - கடைப்பிடிக்கும்படி. விளம்பும் - சொல்லும்.

12. வேதப்பொருள் இன்னதென்று வேதங் கடந்த

மெய்ப்பொருளைக் கண்டுமனம் மேவி விளம்பிப்

போதப்பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்

பூரணசற் குருதாள்கண்டு ஆடாய் பாம்பே.

பொருளுரை:

வேதம் கூறும் மெய்ப்பொருளாகிய கடவுள் இன்னது என்றும், வேதத்தைக் கடந்து நிற்கும் மெய்ப்பொருள் இன்னது என்றும் காட்டி, மனம் விரும்பும்படி எடுத்துக் கூற, பேரறிவாக விளங்கும் அப்பொருள் இன்னது என்று அதனையும் போதித்து உதவும் முழுமையான சற்குருவின் திருவடிகளைக் கண்டு பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

தாள் - திருவடி. விளம்பி - சொல்லி. போதம் - ஞானம்

13. **உள்ளங்கையில் கனிபோல உள்ள பொருளை**

உண்மையுடன் காட்டவல்ல உண்மைக் குருவைக்

கள்ளமனம் தன்னைத்தள்ளிக் கண்டு கொண்டன்பாய்க்

களித்துக் களித்துநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

உள்ளங்கையில் இருக்கும் நெல்லிக்கனிபோல, உலகில் இருக்கும் உண்மைப் பொருளை உள்ளபடியே காட்டுவற்கு வல்ல உண்மையான குருவைத் தீயமனத்தை நீக்கி, உள்ளபடியே ஏற்றுக் கொண்டு அன்பால் மகிழ்ந்து நின்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

கள்ளமனம் - குற்றமுள்ள மனம். களித்து - மகிழ்ந்து.

14. **அங்கையிற்கண் ணாடிபோல ஆதி வஸ்துவை**

அறிவிக்கும் எங்களுயி ரான குருவைச்

சங்கையறச் சந்ததமும் தாழ்ந்து பணிந்தே

தமனியப் படமெடுத்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

உள்ளங்கையில் உள்ள கண்ணாடி, உருவம் (பிம்பம்) காட்ட உதவுவது போல, அனைவருக்கும் மூலமான பொருளை நமக்கு அறிவிக்கும், எங்கள் உயிருக்கு உயிரான குருவை சந்தேகப்படாமல் எப்பொழுதும் தாழ்ந்து பணிந்து, உன் பொன்னறிப் படமெடுத்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

அங்கை - அகம் + கை - உள்ளங்கை. ஆதிவஸ்து - இறைவன். சங்கை - சந்தேகம். தமனியம் - பொன்.

15. **காயம்நிலை யழிகையைக் கண்டு கொண்டுபின்**

கற்புநிலை யுள்ளிற்கொண் டெக்காலமும் வாழும்

தூயநிலை கண்டபரி சுத்தக் குருவின்

துணையடி தொழுதுநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

இவ்வுடல் அழியக் கூடியது என்று கண்டு கொண்டு, நல்லொழுக்க நிலையை மனத்தில் எண்ணிக் கொண்டு, எக்காலமும் தவறின்னி நடக்கும் தூய நிலையுடன் திகழும் பரிசுத்தமான குருவின் இரண்டு திருவடிகளையும் வணங்கி நின்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

கூடு - உடல். வல்லபம் - அளவிட்டுக் கூறமுடியாத அற்புதமான ஆற்றல். வீடுபேறு - முத்தி.

16. **அட்டதிக்கும் அண்டவெளி யான இடமும்**

அடக்கிய குளிகையோடு ஆடி விரைவாய்

வட்டமிட்டு வலம்வரும் வல்ல குருவின்

மலரடி தஞ்சமென் றாடாய் பாம்பே.

பொருளுரை :

எட்டு திசைகளும், அண்டங்களின் வெளியாகிய இடமும், தனக்குள் அடக்கிய ஒரு குளிகையைப் போல் விரைவாக வட்டமிட்டு வலம் வரும் திறமை மிக்க குருவின் திருவடி மலர்களையே அடைக்கலம் என்னு பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

அட்டதிக்கு - எட்டுத்திசை. குளிகை - மாத்திரை. தஞ்சம் - அடைக்கலம்.

17. கற்பகாலங் கடந்துஆதி கர்த்தா வோடுங்

கடமழி யாதுவாழுங் கார ணக்குரு

பொற்பதமே தஞ்சமென்று போற்றுதல் செய்து

பூரணச் சிந்தையோ டாடாய் பாம்பே.

பொருளுரை :

கற்ப காலமும் கடந்து வாழும் இறைவனாகிய ஆதிகர்த்தாவுடன் சென்று தன் உடல் அழியாது திரும்பவும் வாழும் காரணக்குருவின் பொன்னான திருவடிகளே அடைக்கலம் என்று போற்றி முழுமையான சிந்தையோடு பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

கற்பம் - 432 கோடி ஆண்டுகள் கொண்ட பிரமனது ஒரு நாள். ஆதிகர்த்தா - இறைவன். கடம்அழியாது - தன் உடல் அழியாது. பூரணம் - முழுமை.

18. வச்சிரத்திற்கு ஓர்பழுது வாய்க்கு மாயினும்

வல்லுடம்புக்கு ஓர்குறை வாய்த்தி டாது

மெச்சகட முள்ளவெங்கள் வேத குருவின்

மெல்லடி துதித்துநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

இந்திரனின் ஆயுதமாகிய வச்சிராயுதத்திற்கு ஒரு குறை நேர்ந்தாலும் நேரலாம்: (எம்குருவின்) வலிமை வாய்ந்த உடலுக்கு ஒரு குறையும் வராது என்று மெய்யான உணர்வுடைய எம் வேத குருவின் மென்மையான திருவடிகளைத் துதித்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

வச்சிரம் - இந்திரனின் வலிமை மிக்க ஆயுதம். பழுது - குறை. வல்லுடம்பு - வலிமையான உடல்.

<u>பாம்பின் சிறப்பு</u>

19. நாதர்முடி மேலிருக்கும் நாகப் பாம்பே

நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே

பாதலத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே

பாடிப்பாடி நின்றுவிளை யாடு பாம்பே.

பொருளுரை :

சிவபெருமானின் முடி மீதிருக்கம் நாகபாம்பே, நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே, புற்றில் நுழைந்து பாதாளத்தில் குடியேறும் படம் கொண்ட பாம்பே, நாதத்தால் பாடப்பாட விளையாடி மேல் ஏறும் பாம்பே, நீ மகிழ்ந்து ஆடுவாயாக.

இப்பாடலின் உள்ளார்ந்த கருத்து பின்வருமாறு :

குண்டலின் சக்திதான் பாம்பாக உருவகம் செய்யப்பட்டது. அது யோகிகளின் தலைவரை வரும். யோகிகள் விரும்பும்படி சுழுமுனை நாடியாகிய பையில் இருக்கும். இது யோகிகளுக்கு நல்லதையே செய்யும். அது, உடலின் பாதாளமாகிய ஆறு யோக ஆதாரங்களுள் முதலாக இருக்கும் மூலாதாரத்திலிருக்கும் நாடியின் வழியில் வாய் வைத்திருக்கும்.

அட்டாங்க யோகத்தின் இறுதி நிலையாகிய சமாதி நிலையை யோகி அடையும் போது அக்குண்டலினி சக்தி மேலேறும்.

சொற்பொருள் :

நாதர் - இறைவன் (சிவபெருமான்). பை - படம்.

20. வளைபுகும் போதேதலை வாங்கும் பாம்பே

மண்டலமிட் டுடல்வளை வண்ணப் பாம்பே

தளைக்கஞ்சி நின்றிடும் சத்தியப் பாம்பே

தலையெடுத்தே விளையாடு பாம்பே.

பொருளுரை :

வளையாகிய புற்றுக்குள் புகும்போது தலைகீழாகவும், புகுந்த பின் தலையை மேல்நோக்கி வளையின் வாய்ப்பக்கமாகவும் வைத்திருக்கும் பாம்பே, வட்டமாக மண்டலமிட்டிருக்கும் பாம்பே, பிறர் தடைப்படுத்துவதற்கு பயந்து நிற்கும் பாம்பே, நீ தலையைத் தூக்கி ஆடுவாயாக.

இப்பாடலின் உள்ளார்ந்த கருத்து பின்வருமாறு :

மூலாதாரம் என்னும் வளையில் புகுந்து தலை மட்டும் மேலே வரும்படி உயரத்தூக்கி, சுழுமுனையோடு குண்டலினி சக்தி ஒன்றிருக்கும். குண்டலினி சக்தியானது, மூலாதாரத்தில் மூன்று வட்டமாகவும் அரைமடங்கு உயரமாகவும் இருக்கும்.

நாடியுள் போகும்போது தடையின்றிச் செல்லும்.

சொற்பொருள் :

தளை - கட்டுதல். சத்தியம் - உண்மை. மண்டலமிடுதல் - மூன்று வட்டமாகச் சுருண்டிருத்தல்.

21. குற்றமற்ற சிவனுக்குக் குண்டல மானாய்

கூறுந்திரு மாலினுக்குக் குடையு மானாய்

கற்றைக்குழல் பார்வதிக்குங் கங்கண மானாய்

கரவாமல் உளங்களித் தாடு பாம்பே.

பொருளுரை :

சிவபெருமானின் காதில் அணியப்படும் குண்டலம் என்னும் அணிகலனாகவும், திருமாலுக்குக் குடையாகவும், பார்வதிதேவியாரின் தோளில் அணியப்படும் அணிகலனாகவும், கங்கணமாகவும் திகழும் பாம்பே, எங்கும் மறையாமல் உள்ளம் களித்து நீ ஆடுவாயாக.

குண்டலினி சக்தியானதுபாம்பாக உருவகப்படுத்தப்படுகிறது. சிவன், திருமால், பார்வதி ஆகியோர் குண்டலினி சக்தியோடு தொடர்பு கொண்டிருப்பதால் பாம்பு அவர்களுக்கு அணியாகக் காட்டப்படுகிறது. இவர்கள் மூவரும் யோகிகள். மேலும் பார்வதி தேவியார் மூலாதாரத்திலும், திருமால் நடு உடலிலும், சிவபெருமான் தலையிலும் இருந்து குண்டலினி சக்தியுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

சொற்பொருள் :

குண்டலம் - ஒருவகைக் காதணி. குழல் - முடி. கரவாமல் - ஒளிக்காமல்.

22. மண்டலத்தைத் தாங்கும் மிக வல்லமை கொண்டாய்

மாயனுக்குப் படுக்கைக்கு வண்ணப் பாயானாய்

கண்டபடை நடுங்கிடக் காட்சியும் பெற்றாய்

கண்ணேசெவி யாகக்கொணடாய் ஆடு பாம்பே.

பொருளுரை :

இவ்வுலகையே தாங்கும் மிக அதிகமான வலிமை படைத்த பாம்பே, திருமால் அறிதுயில் கொள்ள அவருக்குப் பாயாக ஆன பாம்பே, படைகள் உன்னைக் கண்டால் நடுங்கும் காட்சியாக ஆனாய். கண்களே கேட்கும் செவிகளாகவும் ஆன பாம்பே, நீ ஆடுவாயாக.

இப்பாடலின் உள்ளார்ந்த கருத்து பின்வருமாறு :

குண்டலியானது மண்டலம் (மூன்றாகச் சுருட்டப்பட்டு) இட்டு மூலாதாரத்தைத் தாங்குகிறது.

திருமால் குடிகொண்டிருக்கும் கொப்பூழல் (தொப்புள்) குண்டலினி சக்தி மையம் கொண்டுள்ளது. குண்டலினி சக்தியானது நாடியில் செல்லும் போது நடுக்கம் ஏற்படும்.

சொற்பொருள் :

வல்லமை - வலிமை. மாயன் - திருமால்

23. சந்திரனைச் சூரியனைத் தாவித் தீண்டினாய்

சங்கரனுக்கு ஆபரந் தானு மாகினாய்

மந்திரத்திற்கு அடங்கினாய் மண்டல மிட்டாய்

வளைந்து வளைந்துநின் றாடு பாம்பே.

பொருளுரை :

சந்திர சூரிய கிரகணங்களை இராகு, கேது என்ற கிரகங்கள் மறைக்கின்றன. இது பாம்பு மறைப்பது போல் தோன்றும். சிவபெருமானுக்கு அணிகலனாக பாம்பு விளங்குகிறது. மந்திரத்திற்கு பாம்பு கட்டுப்படும். வட்டமாக அமைந்திருக்கிறது. இத்தகைய ஆற்றலுடைய பாம்பை வளைந்து ஆடுமாறு பாம்பாட்டிச் சித்தர் கூறுகிறார்.

இப்பாடலின் உள்ளார்ந்த கருத்து பின்வருமாறு :

குண்டலினி சக்தியானது தலையில் சூரிய சந்திர மண்டலங்கள் வரை சென்று தொடும்.

சிவபெருமான் முதல் யோகியாகக் கருதப்படுகிறார். அவர் குண்டலினி சக்தியை முழுமையாக மேலேற்றியவர். அவர் கழுத்தில் அணிந்திருக்கும் பாம்பானது, குண்டலினி சக்தியின் உருவகமாகும்.

சுழுமுனை நாடியானது சிவமாகக் கருதப்படுகிறது. குண்டலினி நெருப்பானது ‘‘ஓம்’’ எனும் மூலமந்திரத்திற்குக் கட்டுப்படும்.

குண்டலினி சக்தியானது, மூலாதாரத்தில் வளைந்து கிடக்கிறது.

சொற்பொருள் :

சங்கரன் - சிவபெருமான். ஆபரணம் - அணிகலன்.

<u>**சித்தர் வல்லபம் கூறல்**</u>

24. எட்டுநாகந் தம்மைக்கையா லெடுத்தே யாட்டுவோம்

இந்திரனார் உலகத்தை இங்கே காட்டுவோம்

கட்டுக்கடங் காதபாம்பைக் கட்டிவிடுவோம்

கடுவிஷந் தன்னைக்கக்கி யாடு பாம்பே.

பொருளுரை :

எட்டுப் பெரிய நாகங்களாக இருந்தாலும் அவற்றைக் கையில் எடுத்து ஆடச் செய்வோம். இங்கிருந்தே இந்திரனின் உலகத்தைப் பார்க்கச் செய்வோம். கட்டுக்கு இடங்காத பாம்பு கடிக்காதபடி மந்திரத்தால் அதனை வசப்படுத்துவோம். எனவே, கொடிய விஸத்தைக் கக்கி பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

கடுவிஷம் - கொடிய நஞ்சு

25. ஆதிசேடன் ஆயினும்எம் அங்கையி னாலே

ஆட்டிவிடு வோம்எங்கள் ஆக்கினைக் குள்ளே

நீதியோடு அடங்கியே நின்றிடச் செய்வோம்

நின்றநிலை தவறாமல் ஆடுபாம்பே.

பொருளுரை :

பாம்புகளின் தலைவனாக விளங்கும் ஆதிசேடனே ஆனாலும் எம் உள்ளங்கையினால் ஆட்டிவிடுவோம். டிம் அதிகாரத்திற்கு ஆட்பட்டு நீதியாய் அடங்கி நிற்கச் செய்வோம். எனவே, நின்ற நிரைல தவறாமல் பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஆதிசேடன் - பாம்புகளின் தலைவன். அங்கை - உள்ளங்கை. ஆக்கினை - ஆணை, அதிகாரம்.

26. தூணைச்சிறு துரும்பாகத் தோன்றிடச் செய்வோம்

துரும்பைப் பெருந்தூணாகத் தோற்றச் செய்வோம்

ஆணைப்பெண்ணும் பெண்ணையாணுமாகச் செய்வோம்

ஆரவாரித்து எதிராய்நின் றாடு பாம்பே.

பொருளுரை :

மிகப் பெரிய தூணாகச் சிறு துரும்புபோல் தோன்றும் படிச் செய்வோம். சிறு துரும்பை மிகப் பெரிய தூணாகத் தோன்றும் படிச் செய்வோம். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் ஆகச் செய்வோம். எனவே, ஆரவாரமாக எழுந்து எதிரில் நின்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஆரவாரம் - பேரிரைச்சல்.

27. எட்டுமலை களைப்பந்தாய் எடுத்து எறிகுவோம்

ஏழுகடலையும் குடித்து ஏப்பம் இடுவோம்

மட்டுப்படா மணலையும் மதித்திடுவோம்

மகாராஜன் முன்புநீ நின்றாடு பாம்பே.

பொருளுரை :

எட்டு மலைகளையும் பந்து போல் எடுத்து எறிவோம். ஏழு கடல்களையும் குடித்து ஏப்பம் விடுவோம். அளவற்ற மணலையும் அளந்திடுவோம். சித்தனாகிய மகாராஜன் முன்னால் பாம்பே, நீ நின்று ஆடுவாயாக.

சித்தர்கள் எத்தகைய அற்புதங்களை வேண்டுமானாலும் கூடச் செய்யும் வல்லமை பெற்றவர்கள் என்பதை மேற்காணும் பாடல் கூறுகிறது.

சொற்பொருள் :

மட்டுப்படா - கணக்கில் அடங்கா.

28. மண்டலமுற் றுங்கையால் மறைத்து விடுவோம்

வானத்தையும் வில்லாக வளைத்து விடுவோம்

தொண்டருக்குச் சூனியம் சொல்லிக் காட்டுவோம்

தோன்றலுக்கு முன்புநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

உலகிற்கு ஒளி வராமல் சூரியமண்டலம் முழுவதையும் கையால் மறைத்து விடுவோம். வானத்தையே வில்லாக வளைத்து விடுவோம். அடியார்களுக்கு இறைவன் வெட்ட வெளியானவன் என்பதை விளக்கிக் காட்டுவோம். இவை யாவும் தோன்றும்படி பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மண்டலம் - சூரியமண்டலம். தொண்டர் - அடியவர். சூனியம் - வெட்டவெளி. தோன்றல் - இறைவன்.

29. மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம்

முந்நீருள் இருப்பினும் மூச்சு அடக்குவோம்

தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி விடுவோம்

தார்வேந்தன் முன்புநீநின் றாடு பாம்பே.

பொருளுரை :

பற்றியெரியும் தீயினுக்குள் மூழ்கி வெளியே வருவோம். கடலில் மூழ்கியிருந்தாலும் மூச்சை அடக்குவோம். கோபத்துடன் பாய்ந்து வரும் புலியைத் தாக்குவோம். இறைவன் முன்பு பாம்பே, நீ நின்று ஆடுவாயாக.

சொற்பொருள் :

மூண்டெரியும் - பற்றியெரியும். முந்நீர் - கடல். வன்புலி - கொடும்புலி. தார்வேந்தன் - இறைவன்.

30. செப்பெரிய மூன்றுலகும் செம்பொன் னாக்குவோம்

செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்து விடுவோம்

இப்பெரிய உலகத்தை இல்லாமற் செய்வோம்

எங்கள்வல்ல பங்கண்டுநீ யாடு பாம்பே.

பொருளுரை :

மூன்று உலகங்களையும் செம்மையான பொன்னாக்குவோம். கொழுந்துவிட்டு எரியும் கதிர்களை உடைய சூரியனைக் குளிர்ந்த நிலவாக ஆக்குவோம். இந்தப் பெரிய உலகத்தை இல்லாமற் செய்வோம். எங்களின் அளப்பரிய திறமைகளைக் கண்டு பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

செங்கதிர் - சூரியன். தண்கதிர் - சந்திரன். வல்லபம் - அளப்பரிய ஆற்றல்.

31. வேதன்செய்த சிருஷ்டிகள்போல் வேறு பெய்குவோம்

வோதனையும் எங்கள்கீழே மேவச் செய்வோம்

நாதனுடன் சமமாக நாங்களும் வாழுவோம்

நாங்கள் செய்யும் செய்கையி தென்றாடு பாம்பே.

பொருளுரை :

பிரமன் படைத்த படைப்புகள்போல வேறு படைப்பை நாங்கள் செய்வோம். அந்தப் பிரமனையும் எங்கள் கீழ் இருக்குமாறு செய்வோம். இறைவனுக்குச் சமமாக நாங்கறும் வாழுவோம். இவையெல்லாம் எங்கள் செய்கைகள் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

வேதன் - பிரமன். சிருஷ்டிகள் - படைப்புகள். நாதன் - இறைவன்.

32. அறுபத்து நாலுகலை யாவு மறிந்தோம்

அதற்குமே லொருகலை யான தறிந்தோம்

மறுபற்றுச் சற்றுமில்லா மனமும் உடையோம்

மன்னனே ஆசான் என்று ஆடு பாம்பே.

பொருளுரை :

அறுபத்து நான்கு கலைகளையும் அறிந்தோம். அதற்கு மேலும் ஒரு கலையைக் கூடவே அறிந்துள்ளோம். எந்தப் பொருளின்மீதும் பற்று வைக்காத மனதை உடையோம். இறைவனே எங்கள் குரு என்று பாம்ஆப, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஆசான் - குரு

33. சிறுபுலி யானையாளி சிங்க முதலாய்ச்

சிற்றடிக்குக் குற்றேவல் செய்யச் சொல்லுவோம்

வீறுபெருங் கடவுளை எங்களுடனே

விளையாடச் செய்வோம்என்று ஆடுபாம்பே.

பொருளுரை :

சிறிய புலி, யானை, யாளி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகளைச் சிறிய உயிர்களுக்குப் பணி செய்யுமாறு சொல்லுவோம். இறைவனை எங்களுடன் வந்து விளையாடுமாறு செய்வோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

குற்றேவல் - சிறுபணிகள். யாளி - சிங்கம் போன்று அருக்கும் ஒரு விலங்கு. வீறு – பெருமை, வீரம்.

34. வாசுகியை ஒருபக்கம் மன்னே நிறுத்தே

மகத்தான பதுமனை மறுபக்கம் வைத்தே

தேசுலவு தக்கனைத் தன்றிக்கினிற் சேர்த்துச்

செய்யபது மனைக்கொள் சித்த னாரே.

பொருளுரை :

வாசுகி என்னும் பாம்பை ஒரு பக்கம் நிலையாய் இருக்குமாறு நிறுத்தி வைத்து, மகத்தான பதுமன் என்னும் பாம்பை மறுபக்கம் வைப்போம். தக்கனாகிய பெரிய பாம்பை அதனுடைய திசையில் இருக்கச் செய்வோம். இப்படிச் செய்து பதுமனாரைச் சித்தர்களே! நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்.

சொற்பொருள் :

மன்னே - நிலையாக. தேசுலவு - மிகப்பெரிய. திக்கு - திசை.

35. அனந்தனை யொருபக்க மாக நிறுத்தி

அதன்பக்கங் குளிகனை யண்டச் சேர்த்துக்

கனங்கொண்ட கார்க்கோடகன் காணக் காட்டுங்

கடுஞ்சங்க பாலனைத்தான் சித்த னாரே.

பொருளுரை :

அனந்தனாகிய பாம்பை ஒரு பக்கம் நிறுத்தி, அதன் பக்கத்தில் குளிகனை நெருங்குமாறு சேர்த்து, கார்க்கோடகன் என்னும் பாம்பைப் பிறர் காணுமாறு செய்யுங்கள். சங்கபாலனையும் அப்படியே செய்யுங்கள் சித்தர்களே.

சொற்பொருள் :

அண்ட - நெருங்க. அனந்தன், குளிகன், கார்க்கோடன், கடுஞ்சங்கபாலன் - பாம்புகளின் பெயர்கள்.

36. அட்டதிக்குஞ் சக்கரங் களாகக் கீறி

அக்கோண நிலைகளில் அக்கரஞ் சேர்த்துத்

திட்டமுடன் மந்திரத்தைச் செபித்து நில்லும்

சித்தந்தடு மாறமதீர் சித்தனாரே.

பொருளுரை :

எட்டுத் திசைகளிலும் கீழே எட்டுச் சக்கரங்களாகக் கீறி, எல்லாக் கோணங்களிலும் மந்திர எழுத்துக்களைச் சேர்த்து, முறையாக மந்திரத்தைச் செபித்து நில்லுங்கள். எக்காரணம் கொண்டும் உள்ளம் தடுமாறாதீர் சித்தர்களே.

சொற்பொருள் :

அட்டதிக்கு - எட்டுத்திசை. அக்கரம் அட்சுரம் - மந்திர எழுத்து.

37. அட்டதிக்கும் சக்கரங்கள் அமைத்து விட்டோம்

அவ்வவற்றில் அக்கரங்கள் அமைத்து விட்டோம்

எட்டுநாகம் இருக்கின்ற இடத்தில் விட்டோம்

இனியென்ன செய்வம் சொல்லும் சித்தனாரே.

பொருளுரை :

எட்டுத் திசைகளிலும் சக்கரங்கள் அமைத்துவிட்டோம். அவற்றில் மந்திர எழுத்துக்களையும் அமைத்துவிட்டோம். அந்தச் சக்கரங்களை எட்டு நாகங்கள் இருக்கின்ற திசைகளில்விட்டோம். சித்தனாரே இதற்கு மேலும் என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள். இதுவே அட்டநாகப் பந்தமாகும்.

இவ்வுலகை எட்டுத் திசைகளிலும் எட்டு நாங்கள் தாங்குகின்றன என்று கூறப்படுகிறது.

சொற்பொருள் :

அட்டதிக்கு - எட்டுத் திசை. அக்கரங்கள் - மந்திர எழுத்துகள்.

38. நடுவாக ஆதிசேடன் தன்னை நாட்டும்

நான்கு திக்கும் மந்திரித்த நீறுதூவும்

கடுவிஷங் கக்கவேயக் கட்செ விகளைக்

கையில்எடுத்து ஆட்டுங்கள் சித்த னாரே.

பொருளுரை :

சித்தர்களே! அட்பந்ததிதின் நடுவே, பாம்புகளின் தலைவனாகிய ஆதிசேடனை அமையுங்கள். நான்கு திசைகளிலும் மந்திரித்த திருநீறு தூவுங்கள். கடிய விஷத்தைக் கக்கவே பாம்புகளைக் கையில் எடுத்து ஆட்டுங்கள்.

அட்டநாக பந்தம் தன்னைப் படித்தோரைப் பாம்பு கடிக்காது என்று பெரியோர் கூறுவர்.

சொற்பொருள் :

கடுவிஷம் - கொடிய நஞ்சு. கட்செவிகள் - பாம்புகள்.

<u>பொருளாசை விலக்கல்</u>

39. நாடுநகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்

நடுவன் வரும்பொழுது நாடி வருமோ

கூடுபோன பின்பு அவற்றால் கொள்பயன் என்னோ?

கூத்தன்பதங் குறித்துநின்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

நாடு, நகரம், வீடு, செல்வம், இதர பொருள்கள் - இவை யாவும் நடுவனாகிய இயமன் நம் உயிரைப் பறிக்க வரும்போது நம்மோடு கூட வருமோ? வாரா.

உடலைவிட்டு உயிரானது பிரிந்து போன பிறகு, அப்பொருள்களால் ஆகக் கூடிய பயன்தான் என்ன? எதுவுமில்லை. எனவே, கூத்தாடும் சிவபெருமானின் திருவடிகளைக் குறித்தே பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மாடு - செல்வம். நடுவன் - இயமன். நல்லவர், கெட்டவர் என்று பாராமல் நடுநிலையில் நின்று உயிரைப் பறிப்பதால் இயமன், நடுவன் எனப் பெயர் பெற்றான். கூடு - உடல். கூத்தன் - சிவபெருமான். பதம் - திருவடி.

40. யானைசேனை தேர்ப்பரி யாவு மணியாய்

யமன்வரும் போதுதுணை யாமோ அறிவாய்

ஞானஞ்சற்று மில்லாத நாய்கட் குப்புத்தி

நாடிவரும் படிநீநின் றாடு பாம்பே.

பொருளுரை :

யானைப்படை, காலாட்படை, தேர்ப்படை, குதிரைப்படை ஆகிய நால் வகைப் படைகளும் அணியாக வந்து இயமன் வரும்போது துணையாகுமா? இதனை நீ நன்கறிவாய். ஞானம் சிறிதும் இல்லாத நாய்களுக்குப் புத்தி வருமாறு நீ நின்று பாம்பே, ஆடுவாயாக.

சொற்பொருள் :

சேனை - காலாட்படை. பரி - குதிரை.

41. மாணிக்கமா மணிமுடி வாகு வலயம்

மார்பில்தொங்கும் பதக்கங்கண் மற்றும் பணிகள்

ஆணிப்பொன்முத் தாரமம்பொன் அந்த கடகம்

அழிவான பொருளெனநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

மாணிக்கத்தால் ஆகிய மணிமுடி, தோள் வலயம், மார்பில் தொங்கும் பதக்கங்கள் மற்றும் வேறு கைகள், தூய்மையான பொன்னால் ஆகிய (ஆணிப்பொன்) முத்துமாலை, கையில் அணியும் பொற்கடகம் ஆகிய இவையனைத்துமே அழியும் பொருள்கள்தான் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

வாகு - தோள். முத்தாரம் - முத்துமாலை.

42. மாடகூட மாளிகைகள் வண்ண மண்டபம்

மதில்சூழ்ந்த அரண்மனை மற்றும் உள்ளவை

கூடவாரா வென்றஅந்தக்கொள்கை யறிந்தோர்

குலவாமல் வெறுப்பார்என்று ஆடாய் பாம்பே

பொருளுரை :

மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், வண்ண மண்டபம், மதில் சுற்றிய அரண்மனை மற்றும் உள்ள செல்வங்கள் எல்லாம் நம் கூடவே வருவதில்லை என்ற கொள்கையை அறிந்தவர்கள், அப்பொருள்களை விரும்பாமல் அவற்றை வெறுப்பார்கள் என்று பாம்பே ஆடுவாயாக.

சொற்பொருள் :

குலவாமல் : விரும்பாமல்

43. மலைபோன்ற செம்பொற்குவை வைத்தி ருப்பவர்

மறலிதான் வருகையில் வாரிச் செல்வரோ

அலையாமல் அகத்தினை அத்தன் பால்வைத்தோர்

அழியார்என்றே நீதுணிந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

செம்மையான பொன்னை மலை போன்று குவித்து வைத்திருப்பவர்கள் இயமன் வரும்போது அவற்றை வாரிக்கொண்டு செல்வார்களோ?

மனதை அங்கும் இங்கும் அலையவிடாமல், தலைவனாகிய இறைவன் மேல் வைத்திருப்பவர்கள் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

குவை - குவியல். மறலி - இயமன். அகம் - மனம். அத்தன் - இறைவன்.

44. பஞ்சணையும் பூவணையும் பாய லும்வெறும்

பாழ்சுடு காடதிலே பயன் பெறுமோ

மஞ்சள்மணம் போய்சுடு நாறு மணங்கள்

வருமென்று தெளிந்துநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

பஞ்சணையும், பூ வேலைப்பாடு செய்த தலையணையும், பாயும் பாழான சுடுகாட்டில் பயன்படுமோ பயன்படா. மஞ்சளின் மணம் போய்ப் பிணம் சுடும் தீ நாற்றம்தான் வருமென்று தெளிந்து நின்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

பாயல் - பாய்.

45. முக்கனியும் சர்க்கரையும் மோத கங்களும்

முதிர்சுவைப் பண்டங்களும் முந்தி யுண்டவாய்

மிக்கவுயிர் போனபின்பு மண்ணை விழுங்க

மெய்யாகக் கணடோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

முக்கனிகள், சர்க்கரை, மோதகம் என மிகுந்த சுவை மிக்க பண்டங்களை முன்பு விரும்பி உண்டவாயானது, உடலை விட்டு உயிர்போன பின்பு மண்ணை விழுங்குவதை உண்மையாகவே கண்டோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

முதிர்சுவைப் பண்டங்கள் - மிகுந்த இனிப்புச் சுவையுடைய பொருள்கள்.

46. வண்ணப்படடும் வாசனையும் வாய்த்த கோலமும்

வண்கவிகை ஆலவட்டம் மற்றுஞ் சின்னமும்

திண்ணமுடன் யமபுரஞ் செல்லுங் காலத்தில்

சேரவர மாட்டாவென்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

பல வண்ணப் பட்டாடைகளும், வாசனைப் பூச்சும், அழகிய வடிவமும், சிறந்த குடையும், ஆலவட்டமும் மற்றும் ஆடம்பரச் சின்னங்கள் பலவும் இயமரபும் செல்லும்போது கட்டாயமாகக் கூட வரமாட்டா என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

கோலம் - அழகு, வடிவம். ஆலவட்டம் - பெரிய விசிறி. திண்ணமுடன் - உறுதியாக.

47. மக்கள்பெண்டிர் சுற்றமரு மக்கள் மற்றவர்

மாளும்போது கூடஅவர் மாள்வ தில்லையே

தக்கவுல கனைத்தையுந் தந்த கர்த்தனைத்

தாவ்த்தாவித் துதித்துநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

பிள்ளைகள், மனைவி, உறவினர், மருமக்கள் போன்றோர் நாம் இறக்கும்போது அவர்களும் நம்முடன் இறப்பதில்லை, இவ்வுலகங்கள் அனைத்தையும் தந்த இறைவனைத் தாவித் துதித்து நின்று, பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மக்கள் - பிள்ளைகள். பெண்டிர் - மனைவி. கர்த்தன் - இறைவன். துதித்து – வணங்கி.

48. கானலைமான் நீரெனவே கண்டு செல்லல்போல்

காசினிவாழ் வினைமூடர் கண்டு களிப்பார்

மேனிலைகண் டார்கள்வீணாய் வீம்பு பேசிடார்

மெய்யன்பதம் நாடுவார்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

கானலநீரை உண்மையான நீர் என்று எண்ணி மான்கள் அதன் அருகில் சென்று ஏமாறுவதுபோல் உலகில் வாழும் மக்கள் (மூடர்கள்) தம் கண்ணால் காணும் செல்வங்கள் நிலையானவை என எண்ணி மகிழ்வர். ஆனால், அவை உண்மையிலேயே அழியும் தன்மையுடையவை என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். என்று, பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

காசினி - உலகம். மூடர் - அறிவற்றவர். களிப்பார் - மகிழ்வார். மெய்யன் - இறைவன்.

காமம் விலக்கல்

49. வெயில் கண்ட மஞ்சள் போன்ற மாதர் அழகை

விரும்பியே மேல்விழுந்து மேவும் மாந்தர்

ஒயில்கண்டே இலவுகாத் தோடுங் கிள்போல்

உடல்போனால் ஓடுவார்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

வெயில் பட்டவடன் அழகாய்த் தோன்றும் மஞ்சள் போன்ற பெண்களின் அழகை விரும்பி, மேன்மேலும் ஆசை கொள்ளும் மனிதர்கள், இளவம்பஞ்சுக்காயைப் பழம் என்று எண்ணிக் காத்திருந்து ஏமாந்த கிளிபோல், உடல் அழகு தளர்ந்ததும் ஆசையைக் கைவிட்டு ஓடுவர் என்று பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மாதர் - பெண்கள். மாந்தர் - மக்கள். ஒயில் - அழகு.

50. செண்டுமுலை வண்டுவிழி கொண்ட தோகையைச்

சித்தப்பால் விழுங்கியே சீயென்று ஒறுத்தோம்

குண்டுகட்டு எருமை யேறுங் கூற்றுப் பருந்தைக்

கொன்றுதின்று விட்டோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

பூச்செண்டு போன்ற திரண்ட மார்பகமும், வண்டு போல் விழிகளும் கொண்ட மயில் போன்ற பெண்களின் மோகத்தை சித்தத்தில் ஊற்றெடுக்கும் பாலை உண்டு அவர்களை வெறுத்து ஒதுக்கினோம். ஆழ்ந்தகன்ற கண்கள் உடைய எருமையை, பருந்து கொன்று தின்றது போல் மோகத்தை முழுமையாகவே நீக்கிவிட்டோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

சித்தப்பால் - சிந்தனையில், ஒறுத்தோம் - வெறுத்தோம். தண்டித்தோம்.

51. வட்டமுலை யென்றுமிக வற்றுந் தோலை

மகமேரு என்றுவமை வைத்துக் கூறுவார்

கெட்ட நாற்ற முள்ள யோனிக் கேணியில் வீழ்ந்தோர்

கெடுவரென்றே நீதுணிந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

வற்றித் தளர்ந்து போகும் தோலை வட்ட முலை என்றும், மகாமேரு மலை என்றும் உவமை கூறுவர். தீ நாற்றம் சீசும் யோனியாகிய கிணற்றில் விழுந்த அனைவருமே அழிவர் என்று துணிந்து சொல்லி பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

வற்றும் தோல் - சுருங்கும் தோல், மகமேரு - இமயமலை. பேண்களின் முலைக்கு உவமையாகி வந்தது.

52. மலஞ்சொரி கண்ணைவடி வாளுக்கு ஒப்பாக

வருணித்துச் சொல்வார்மதி வன்மை யில்லாதார்

குருநலம் பேசுகின்ற கூகை மாந்தர்கள்

கும்பிக்கே இரையாவார்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

அழுக்கு வடியும் கண்ணை கூர்மையான வாளுக்கு ஒப்பானது என்று அறிவுத் தெளிவு இல்லாதவர்கள் சொல்லி மகிழ்வர். சிவந்த அழகைப் பற்றி பேசும் அந்த ஆந்தை மனிதர்கள், சேற்றில் அழுந்தி இறப்பர் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மலம் - அழுக்கு(பீழை). முதி - அறிவு. கூகை - ஆந்தை. கும்பி- சேறு.

53. சிக்குநாறுங் கூந்தலைச் செழுமை மேகமாய்ச்

செப்புவார்கள் கொங்கைதனைச் செப்புக்கு ஒப்பதாய்

நெக்குநெக்கு ருகிப் பெண்ணை நெஞ்சில் நினைப்பார்

நிமலனை நினையார்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

சிக்கும் துர்நாற்றமும் கொண்ட பெண்களிகளின் கூந்தலைச் செழுமையான மேகம் என்று கூறுவர். மார்பகங்களைக் கலசத்திற்கு ஒப்பாகக் கொண்டு உருகி உருகி அப்பெண்களை மனதில் எண்ணுவர். ஆனால்டு, குற்றமற்ற இறைவனை நினைக்கமாட்டார்கள் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

செப்புவார்கள் - கூறுவார்கள். செப்பு - கலசம். கொங்கை - மார்பகம். நிமலன் - இறைவன்.

54. நாறிவரும் எச்சில்தன்னை நல்லமுது என்றும்

நண்ணுஞ்சளி நாசிதனை நற்குமிழ் என்றும்

கூறுவார்கள் புத்தியில்லாக் கூகை மாந்தர்

கோன் நிலையை அறியார்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

பெண்களிகளின் வாயில் இருந்து ஒழுகும் எச்சிலை நல்ல அமுது என்றும் சளியுள்ள மூக்கை நல்ல குமிழம்பூ என்றும் கூறுவர் அறிவில்லாத ஆந்தை மனிதர்கள். கடவுள் நிலையை இவர்கள் அறியமாட்டார்கள் என்று பாமத்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

நண்ணும் - சேரும். நற்குமிழ் - நல்ல குழிழம்பூ. இதனைப் பெண் மூக்குக்கு உவமையாகக் கூறுவர். நாசி - மூக்கு. கோன் - இறைவன்.

55. மயிலென்றும் குயிலென்றும் மாணிக்கமென்றும்

மானேயென்றும் தேனேயென்றும் வானமு தென்றும்

ஒயிலான வண்ணமயிற்கு ஒத்தவ ளென்றும்

ஓதாமற் கடிந்து விட் டாடாய் பாம்பே.

பொருளுரை :

மயில் என்றும், குயில் என்றும், மாணிக்கம் என்றும், மானே என்றும், தேனே என்றும், வானத்து அமுதம் என்றும், அழகான வண்ண மயிலுக்கு இவள் ஒப்பானவள் என்றும் பெண்களைப் புகழ்ந்து கூறுவதை விட்டொழியுங்கள் என்று கடிந்து சொல்லி பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஒயில் - அழகு. ஓத்தவள் - ஒப்பானவள். ஓதாமல் - கூறாமல். கடிந்து- வெறுத்து.

56. மின்னற் கொடியென்றுஞ் சோதி விளக் கென்றும்

மெல்லியென்றும் வல்லியென்றும் மேனகை யென்றும்

கன்னற் கட்டி, யென்றுஞ் சீனிக் கற்கண்டு என்றும்

கழறாமல் கடிந்தோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

மின்னற் கொடி என்றும், ஒளிரும் விளக்கு என்றும், மெல்லியள் என்றும், கொடி என்றும், தேவலோகத்தில் வாழும் மேனகை என்றும், சீனிக்கற்கண்டு என்றும், பெண்களைப் புகழ்ந்து ஓறுவதை விட்டொழித்து விட்டோம் என்று ஆடாய் பாம்பே.

சொற்பொருள் :

வல்லி - கொடி. கன்னற்கட்டி - வெல்லம். கழறாமல் : புகழ்ந்து கூறாமல்.

57. பூவையென்றும் பாவையென்றும் பொன்னேயென்றும்

பூந்திருவே என்றும் என்றன் பொக்கிஷமென்றும்

கோவையென்றுங் கோதையென்றுங் கோகிலம் என்றும்

கூறாமல் துறந்தோம் நாம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

மைனா, சிலை, பொன், பூவில் உள்ள இலக்குமி, என் செல்வப் புதையல், கோவைப்பழம், குயில் இவ்வாறெல்லாம் பெண்களைப் புகழ்ந்து கூறாமல் துறந்துவிட்டோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

பூவை - மைனா, பாவை - சிலை, பூந்திரு - இலக்குமதி, பொக்கிஷம் - கருவூலம். கோகிலம் - குயில்.

58. மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்

மல்கும்புழுக் கூட்டின்மேல் வண்ணத் தோலென்றும்

சலக்குழிக் குள்ளேநாற்றம் சார்ந்த சேறென்றும்

தானறிந்து தள்ளினோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

மலத்தைச் சுமக்கும் குடமான உடலிலே மஞ்சள் பூச்சு என்றும், புழுக்கள் பெருகும் கூடாகிய உடலின்மேல், போர்த்தியுள்ள அழகான தோல் என்றும், சலக்குழியில் சேர்ந்த துர்நாற்றமுள்ள சேறு என்றம் அறிந்து தான் பெண்களின் மீது கொண்ட மோகத்தைத் தள்ளினோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மல்கும் : பெருகும்.

<u>உடலிழிவு</u>

59. ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே

உதிரப் புனலினிலே உண்டை சேர்த்தே

வாய்த்தகுய வனார் பண்ணும் பாண்டம்

வறகோட்டுக்கும் ஆகாதுஎன்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

மக்கிப் போன மண்குழியிலிருந்து மண்ணை எடுத்து, இரத்தமாகிய நீரால் உண்டை சேர்த்து, விபரமாகக் குயவனார்(இறைவன்)உண்டாக்கும் பாத்திரம் (இவ்வுடல்) உடைந்து போன ஓட்டுக்குரிய மதிப்பைக் கூட பெறாது என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

இறைவன் என்னும் குயவனார் படைத்த இவ்வுடல், முடிவில் நிலையில்லாமல் அழிந்து விடும். எனவே, வாழும் போதே புண்ணியச் செயல்களை ஆற்ற வேண்டும் என்பதே இப்பாடலின் உட்கருத்தாகும்.

சொற்பொருள் :

உதிரம் - இரத்தம். குயவனார் - இங்கு இறைவனைக் குறிக்கும். வறகோடு - உடைந்துபோன ஓடு.

60. இருவர்மண் சேர்ந்திட ஒருவர் பண்ண

ஈரைந்து அமாதமாய் வைத்த சூளை

அருமையா யிருப்பினும் அந்தச் சூளை

அரைக்காசுக்கு ஆகாதுஎன்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

இருவர் சேர்ந்து மண் பிசைய, ஒருவர் பானை செய்து, அவரே பத்து மாதம் சூளையில் வைத்துப் பக்குவமாய் இறக்கி வைத்தாலும், அந்தப் பானையானது இறுதியில் அரைக்காசுக்கும் உதவாது. இது பாடலின் வெளிப்படையான அர்த்தம்.

இதன் உள்ளார்ந்த பொருள் பின்வருமாறு : தாய், தந்தை இருவரும் சேர்ந்து ஒன்றாய் இணைந்திட, அதில் தாயானவள் கருவுற்று, பத்து மாதங்கள் தன் பிள்ளையை வயிற்றில் சுமந்து பெற்றெடுக்கும் இவ்வுடலானது மிகவும் அருமையாக இருப்பினும், இறுதியில் அவ்வுடலானது அழிந்து விடுகின்றது. அப்போது அது அரைக்காசுக்கும் கூட விலை பெறாது என்று பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஈரைந்து மாதம் - $2 \times 5 = 10$ மாதம்.

61..பரியாசம் போலவே கடித்த பாம்பு

பலபேரறிவே மெத்த வீங்கிப்

பரியாரம் ஒருமாது பார்த்த போது

பையோடே கழன்றதென் றாடாய் பாம்பே.

பொருளுரை :

ஒருவரை விளையாட்டுப் போக்கில் பாம்பு கடித்தது. பின்னர், அது பல பேர் அறிந்து கொள்ளும் படி வீங்கி விட்டது. ஒருவர் வந்து சிகிச்சை அளித்ததும் விஷம் முழுவதும் இறங்கியது. இது இப் பாடலின் மேலோட்டமான பொருளாகும்.

இப்பாடலின் உள்ளார்ந்த பொருள் பின்வருமாறு :

ஒரு பிறவியில் செய்த வினைகளின் பயனாக அடுத்த பிறவி வாய்த்தது. ஆப்பிறவியை வீணே கழிக்காமல் யோகம் இருந்து இறைவனை நினைத்தால் குண்டலினிப் பாம்பு படிப்படியாய் மேலேறிப் பல நாடிகளிலும் அறியும் படி வீங்கி நுழைந்து, வீடுபேறு வாய்த்ததால் பிறவி தொலைந்தது என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

பெண் ஒருத்தி விளையாட்டுப் போலவே ஆடவன் ஒருவனுடன் உறவு கொள்ள அதனால் கர்ப்பம் உண்டாக, இதற்குப் பரிகாரம் என்ன என யோசிக்கும் வேளையில் குழந்தையே பிறந்து விட்டது என்பது இதன் தெளிபொருள்.

சொற்பொருள் :

பரியாசம் - விளையாட்டு. பை - படம்(இவ்விடத்தில் கர்ப்பப்பையைக் குறித்தது). மாது - பராசக்தி.

62. சீயும்மலமும் செறி செந்நீரும் நிணமுஞ்

சேர்ந்திடு துர்நாற்றமுடைக் குடமது உடைந்தால்

நாயும்நரி யும்பெரிய பேயுங் கழுகும்

நமதென்றே தின்னுமென்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

சீழ், மலம், இரத்தம், கொழுப்பு ஆகியவை சேர்ந்து துர்நாற்றம் வீசும் இந்த உடலாகிய குடம் உடைந்தால் நாயும், நரியும், பெரிய பேயும், கழுகும் போன்றவை இது நம் உணவு என்று தின்னும் என்று பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

செந்நீர் - இரத்தம். நிணம் - கொழுப்பு. குடம் - உடல்.

63. நீரில் எழும் நீர்க்குமிழி நிலைகெ டல்போல

நில்லாது உடல் சீங்கி விடுமத் நிச்சயம் என்றே

பாரில் பல உயிர்களைப் படைத்த வன்தனைப்

பற்றவேநீ பற்றித்தொடர்ந்து ஆடாய் பாம்பே.

சொற்பொருள் :

நீரில் எழும் நீர்க்குமிழியானது நிலைகெட்டு நீராய் கலத்தல் போல, இந்த உடலும் நிலைத்து நிற்காமல் அழிந்து விடும். இது நிச்சயம் என்று இவ்வுலகியல் பல உயிர்களையும் படைத்த இறைவனை மிகவும் பற்றிப் படர்ந்மு பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

நிலைகெடல் - அழிதல். பார் - உலகம்.

64. நாறு மீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்

நாளுங்கழு வினும் அதன் நாற்றம் போமோ

கூறுமுடல் பலநதி யாடிக் கொண்டதால்

கொண்ட மலம் நீங்காது என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

துர்நாற்றம் வீசும் மீனைப் பல முறை நல்ல தண்ணீரால் கழுவினாலும் அதனுடைய துர்நாற்றம் போகாது. அது போல இவ்வுடலானது பல புண்ணிய தலங்களில் நீராடினாலும் மலம்(அழுக்கு) நீங்காது என்ற பாம்பே நிஆடுவாயாக.

சொற்பொருள் :

மலம் - அழுக்கு.

65. காய்த்தமரம் அதுமிக்க கல்லடிப்படும்

கன்மவினை கொண்டகாயம் கண்டனை பெறும்

வாய்த்ததவ முடையவர் வாழ்பவர் என்றே

வத்துத்திரு வடிதொழுது ஆடாய் பாம்பே.

பொருளுரை :

நன்றாகப் பழம் காய்க்கும் மரம் தான் பலராலும் கல்லடிபடும். அதுபோல, பாவங்கள் செய்த உடல் தான் தன் வினைகளுக்கு ஏற்ப தண்டணை பெறும். தவம் செய்தவர் மட்டுமே இம் மண்ணுலகில் இன்பமாய் வாழ்வர் என்று எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவடிகளை வணங்கி பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

காயம் - உடல். கண்டனை – தண்டணை. வத்து - இறைவன். தொழுது – வணங்கி.

66. பேசரிய நவவாயில் பீற்றல் துருத்தி

பெருங்காற்றுள் புகுந்ததாற் பேச்சு உண்டாச்சே

ஈசனிலை அறியாருக்கு இந்தத் துருத்தி

எரிமண்ணிற்கு இரையாம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

பேசுவதற்கரிய ஒன்பது வாயில்களாகிய துளைகளில் பெரும்புயல் நுழைந்தது போல் என்று பேச்சுண்டு. ஏஅனனில், இறைநிலையை அறியாதவருக்கு இந்தத் துருத்தி நெருப்புக்கும் மண்ணுக்கும் இரையாகும் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

நவம் - ஒன்பது. ஈசன் - இறைவன். துருத்தி – உடல்.

67. மரப்பாவை போலஒரு மண்ணுருச் செய்து

வளமான சீவன்என்னும் சூத்திரம் மாட்டித்

திரைக்குள்ளிருந்து அசைப்போன் தீர்ந்த பொழுதே

தேகம்விழும் என்று தெளிந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

மரத்தினால் செய்யப்பட்ட பொம்மைபோல, மண்ணால் செய்த உடம்பில், உயிர் என்னும் நூலைக் கட்டி திரைக்குள்ளே இருந்து ஆட்டுபவன்,(இறைவன்) அவ்வுயிரை இயக்க மறுத்தால், உடலும் கீழே விழும். ஏன்று தெளிந்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மண்ணுரு – மண்ணால் செய்த உருவம். சூத்திரம் - கயிறு. தேகம் - உடல்.

68. தசநாடி தசவாயு சத்த தாது

சார்ந்த மரக் கப்பல்அது தத்தி விழுமே

இசைவாகக் கப்பலினை ஏக வெள்ளத்தில்

எந்நாளும் ஓட்டத்துணிந் தாடாய் பாம்பே.

பொருளுரை :

பத்து நாடிகள், பத்து வாயுக்கள், ஏழு தாதுக்கள் இவைகளால் இவ்வுடல் கட்டப்பட்டது இவ்வுடல் என்னும் மரக்கப்பல். இஅது தடுமாறி விழவும் கூடும். ஆவ்வாறு இல்லாமல், இசைவாகக் கப்பலை ஒரே வெள்ளத்தில் எந்நாளும்' செலுத்துவது எப்படி என்று முடிவு செய்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

தசம் - பத்து. சப்தம் - ஏழு. தத்தி – தடுமாறி. ஏகம் - ஒன்று.

தசநாடிகள் பின்வருமாறு :

1.இடைகலை, 2.பிங்கலை, 3.சுழுமுனை, 4.சிகுவை, 5.புருடன், 6.நாகன், 7.கூர்மன், 8. கிருகரன், 9.தேவதத்தன், 10.தனஞ்செயன்.

சுத்த தாதுக்கள் பின்வருமாறு :

1.இரசம், 2.ஊதிரம், 3.எலும்பு, 4.தோல், 5.இறைச்சி, 6.மூளை, 7.சுக்கிலம் என்பனவாகும்.

மனப்பற்று நீக்கல்

69. தாமரையின் இலையினிலே தண்ணீர் தங்காத

தன்மைபோலச் சகத்தாசை தள்ளி விட்டெங்கும்

தூமணியாம் விளங்கிய சோதி பதத்தைத்

தொழுது தொழுதுதொழுது ஆடாய் பாம்பே.

பொருளுரை :

தாமரை இலையின் மேல் நீர்த்துளி பட்டாலும் அது ஒட்டாது நீங்குவது போல, இவ்வுலகில் நாம் வாழ்ந்தாலும் ஆசைகளால் அமுங்கிவிடாமல் அவற்றை நீக்கிவிட்டு, எங்கும் தூய மணிபோல் விளங்கும் சோதி வடிவான இறைவனின் திருவடிகளைத் தொழுது பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

சகத்தாசை - உலக ஆசை. தூமணி - தூய்மையான மணி. சோதி - இறைவன். பதம் - திருவடி. தொழுது - வணங்கி.

70. கள்ளங்கொலை காமமாதி கண்டித்த வெல்லாம்

கட்டறுத்து விட்டுஞானக் கண்ணைத் திறந்து

தெள்ளிதான வெட்டவெளி சிற்சொ ரூபத்தைத்

தேர்ந்து பார்த்துச் சிந்தைதெளிந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

வஞ்சகம், கொலை, காமம் முதலிய பெரியோர் கண்டித்த அனைத்துத் தீய குணங்களையும் சுவடு தெரியாமல் வெறுத்து ஒதுக்கி, ஞானக் கண்னணத் திறந்து, தெளிவான வெட்டவெளியாக விளங்கும் சிற்சொரூபத்தைத் தேர்ந்து பார்த்து அதைச் சிந்தனை செய்து தெளிந்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

கள்ளம் - வஞ்சகம். சிற்சொரூபம் - இறைவன்

71. **சொல்லும்புளி யம்பழத்தின் ஓடு போலவே**

சுற்றத்திருந் தாலுமவர் தொந்தங்கள் அற்று

நில்லுமமே மேநீபர நின்ம லத்திலே

நின்துணைதான் வெறும்பாழ்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

புளியம்பழமும் அதன் ஓடும் (மேல்தோல்) ஒன்றோடு ஒன்று ஒட்டாமலிருந்தாலும் , புளியம்பழத்திற்கு அதன் மேலோடு பாதுகாப்பு அளிக்கின்றது. அதுபோல, ஒருவனுக்கு அவனுடைய உறவினர்கள் பாதுகாப்பு அளித்தாலும் , அவன் அவர்களுடன் நெருக்கமான உறவு கொள்ளாமல் வாழ வேண்டும். மனமே! நீ இவ்வாறு வாழ வேண்டும்.

இல்லையெனில் , உன்னால் இறைவனை அடைய இயலாது. அதற்கு நீ இலாயக்கில்லை. உன்னுடைய துணைவன் இறைவன் என்று சொல்லி பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

சுற்றம் - உறவினர். தொந்தம் - தொடர்பு.

72. **சேற்றில்திரி பிள்ளைப்பூச்சி சேற்றை நீக்கல்போல்**

தேசத்தோடு ஒத்துவாழ்வார் செய்கை கண்டபின்

சாற்றுபர வெளிதனைச் சாரும் வழியே

தானடக்க வேணும்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

சேற்றிலே திரிகின்ற பிள்ளைப் பூச்சியானது, அந்த சேற்றைத் தன் உடலில் படாமல் நீக்கி வாழ்வதுபோல, பல்வேறு ஆசைகளுடன் வாழும் நாட்டு மக்களின் செயல்களைக் கண்டு, நாம் அவர்களைப் போன்று ஆசைகளில் சிக்கிக் கொள்ளாமல் ஒதுங்கி வாழ்ந்து, இறைநிலை அடைய வேண்டுமென்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

தேசம் - நாடு. ஓத்து - ஒன்றுபட்டு.

73. **எண்ணெய்க்கும் தண்ணீர்க்கும் தொந்தம்இல்லா வாறுபோல்**

எப்போதும் இப்புவியில் எய்த வேண்டும்

கண்ணுக்குக் கண்ணான ஒளிகண்டு கொள்ளவே

கட்டறுத்து வாழ்ந்திடநின்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

எண்ணெய்க்கும் தண்ணீர்க்கும் தொடர்பு இல்லாதவாறுபோல் , எப்போதும் இப்புவியில் வாழ வேண்டும். எண்ணெய் தண்ணீருடன் ஒட்டாது. அதுபோல, நாம் இவ்வுலகில் வாழ்ந்தாலும் ஆசைகளில் அமிழ்ந்து போகாமல் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். கண்ணுக்குக் கண்ணான ஒளியைப் பார்த்துப் பாசம் நீங்கி வாழ்க என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

தொந்தம் - தொடர்பு. புவி - பூமி. கட்டறுத்து - ஆசைகளிலிருந்து விலகி.

74. கக்கிவிட்ட சோறுகறி கந்த மூலங்கள்

கண்களுக்குச் சுத்தமான காட்சி போலவே

சிக்கிக் கொண்ட சகத்தினைச் சீஎன்று ஒறுத்துச்

சீர்பாதம் காணத் தெளிந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

உண்ட சோறு கறி வாசைன மூலங்கள் பலவற்றைக் கக்கிவிட்டது போல், கண்களுக்குச் சுத்தமாகக் காட்சி தந்த இந்த உலகப் பொருள்களில் மேன்மேலும் சிக்காமல் 'சீ' என்று உதறித் தள்ளி, நீ இறைவனின் சிறப்பு மிக்கத் திருவடிகளைக் காண தெளிந்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

கந்தமூலங்கள் - வாசனைப்பொருள்கள். சகம் - உலகம். சீர்பாதம் - பெருமை பொருந்திய திருவடி. ஒறுத்து - வெறுத்து.

75. கோபம்என்னும் மதயானை கொண்ட மதத்தை

கூர்கொள்புத்தி அங்குசத்தாற் கொன்று விட்டோம்காண்

தீபம்என்னும் சிற்சொரூபச் செய்ய பொருளைச்

சேர்ந்துஉறவு கொண்டோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

கோபம் என்னும் யானை கொண்ட மதத்தைக் கூர்மையான புத்தி என்னும் அங்குசத்தால் கொன்றுவிட்டோம் பார். சோதி வடிவாகிய சிற்சொரூபப் பொருளைச் சேர்ந்து அதனோடு உறவு கொண்டோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

அங்குசம் - யானையை அடக்கும் கருவி.

76. நித்தியம் என்னும் மலையில் நின்றுகொண்டோம் யாம்

நினைத்தபடியே முடித்து நின்மலம் ஆனோம்

சத்தியமாய் எங்கள் கடம்தான் அழியாதே

சந்ததமும் வாழ்வோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

நித்தியமாகிய மலையில் ஏறி நிற்கின்றோம். நினைத்தபடியே முடித்து பற்றுகள் என்னும் அழுக்கிலிருந்து நீங்கினோம். சத்தியமாய் எங்கள் உணர்வுதான் அழியாமல் எப்பொழுதும் வாழ்வோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

சந்ததம் - என்றும். நின்மலம் - அழுக்கற்ற. கடம் - உணர்வு. உடல் என்றும் கொள்ளலாம்.

77. மனம்என்னும் குதிரையை வாகனம் ஆக்கி

மதிஎன்னும் கடிவாளம் வாயில் பூட்டிச்

சினம்என்னும் சீனிமேல் சீராய் ஏறித்

தெளிவிடம் சவாரிவிட்டு ஆடாய் பாம்பே.

பொருளுரை:

மனம் என்னும் குதிரையை வாகனமாக்கிப் புத்தியை கடிவாளம் ஆக்கி அதன் வாயில் பூட்டி, கோபம் என்னும் குன்றில் சீராக ஏறித் தெளிவுண்டாக்கும் சவாரியில் சென்றோம் என்று பாம்பே, நீ ஈடுவாயாக.

சொற்பொருள் :

மதி - அறிவு,புத்தி. சினம் - கோபம். சவாரி - அமர்ந்து பயணம் செய்தல்.

78. ஆசையென்னும் செருப்பின்மேல் அடியை வைத்தே

ஆங்கார முள்காட்டை அறவே மிதித்தே

காசையெனும் துர்குணத்தில் கனலைக் கொளுத்திக்

காலாகாலம் கடந்தோம் என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

ஆசையென்னும் செருப்பில் அடிவைத்து, ஆணவம் என்னும் முள் நிறைந்த காட்டை முழுவதுமாகக் கடந்து, புகழ் என்னும் துர்க்குணத்தின் கனவைக் கொளுத்தி எல்லாக் காலத்தையும் கடந்து நின்றோம் என்று பாம்பே; நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஆங்காரம் - ஆணவம். அறவே - முற்றிலும். காசு - புகழ். கனல் - நெருப்பு.

79. காலன்எனும் கொடிதான கடும்ப கையைநாம்

கற்பம்எனும் வாளினாலே கடிந்து விட்டோம்

தாலமதிற் பிறப்பினைத் தானும் கடந்தோம்

தற்பரம் கண்டோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

மரணம் என்னும் கொடிய பகையை, காய கற்ப மருந்சு எனும் வாளால் நீக்கிவிட்டோம். இவ்வுலகில் இனியும் பிறப்பது என்பதனைக் கடந்தோம். இறைவனைக் கண்டோம் என்று பாம்பே, ஆடுவாயாக.

சொற்பொருள் :

காலன் - இயமன். இங்கு மரணத்தைக் குறித்து நிற்கின்றது. தாலம் - உலகம். தற்பரம் - இறைவன்.

80. தேனில் வீழ்ந்த ஈயைப்போலச் சிந்தை குலைந்து

திகையாமல் சிற்சொரூப தெரிச னைகண்டு

வானிற்பறந் திடச்சூத வான்ம ணிதீர்ந்து

வாயிற்போட் டேகநீதிநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

தேனில் விழுந்த ஈயைப்போல மனம் கலங்கித் திகைத்து நிற்காமல் , சிற்சொரூபமாகிய இறைவனைக் கண்டு, வானில் பறந்து செல்ல சூத வான்மணி செய்து முடித்து வாயில் போட்டபடிச் செல்ல பாம்பே, நீ நின்று ஆடுவாயாக.

சொற்பொருள் :

சிந்தை - மனம். குலைந்து – கலங்கி. சூதம் - பாதரசம். இதன் மூலம் செய்யப்படும் ஒரு மணியை வாயில் போட்டுக் கொண்டு வான்வழியாகப் பறந்து செல்லும் சித்து செய்வர் சித்தர் பெருமக்கள்.

81. தூக்கியநற் பாதங்கண்டேன் சோதியும் கண்டேன்

சுத்தவெளிக்கு உள்ளேயொருக் கூத்தனைக் கண்டேன்

தாக்கிய சிரசின்மேல் வைத்த பாதம்

சற்குருவின் பாதம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

நடராசப் பெருமானின் தூக்கிய திருவடிகளைக் கண்டேன்: சோதி வடிவமாய் அவரைக் கண்டேன்: சுத்த வெளிக்குள் ஒரு கூத்தனைக் கண்டேன். இதற்கு என்னைத் தயார் செய்து என் தலையில் அமர்ந்த என் சற்குருவின் திருவடிகளே காரணம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

பாதம் - திருவடி. கூத்தன் - நடராசப் பெருமான். சிரசு - தலை.

82. ஆலடிப் பொந்தினிலே வாழ்ந்த பாம்பே

அரசடிப் பொந்திலே புகுந்து கொண்டாய்

வாலடி தன்னிலே பார்த்துப் பார்த்து

வாங்கியே தூங்கிநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

ஆலமரத்தின் அடிப்பொந்துக்குள் இருந்த பாம்பே, இப்போது அரச மரத்தடிப் பொந்தினுள் புகுந்து கொண்டாய். உன் வாலின் அடிப்பகுதியைப் பார்த்துப் பார்த்து யோகசித்தி பெற்றுச் சமாதியில் இருந்து பாம்பே நீ ஆடுவாயாக.

சுமாதி நிலையில் இருப்பதையே பாம்பாட்டிச் சித்தர் 'தூங்குதல்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். சமாதிநிலை என்பது அட்டாங்க யோகத்தின் இறுதி நிலையாகும்.

குண்டலினி சக்தியானது படிப்படியாய் மேலேறி, சமாதி நிலையை அடைவதை இப்பாடல் கூறுகிறது.

சொற்பொருள் :

ஆல் - ஆலமரம். வுாலடி – வாலின் அடிப்பகுதி.

83. நாலு தெருவினிலே நாலு கம்பம்

நடுத்தெரு வினிலேயோர் பொன்னுக் கம்பம்

போலும் விளங்கு பொன்னுக் கம்பத்தி னுக்கே

பூமாலை சூட்டிநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

நாலுதெரு கூடுமிடம் போன்று பொதுவான மூலாதாரம். நான்கிதழ் தாமரை அதன் நடுத்தெருவிலே ஓடும் பொன் கம்பம் என்பது சுழுமுனை நாடியை. அந்த பொற்கம்பத்திலே பூமாலை சூட்டி நின்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

நாலுகம்பம் - நான்கிதழ் தாமரை கொண்ட மூலாதாரம் என்னும் யோக ஆதாரம். பொன்னுக்கம்பம் - சுழுமுனை நாடி. இவை பரிபாஷைகள்.

84. ஆழிபெயர்ந் தாலும்மேரு மட்டே அலையும்

அடியோடு பெயர்ந்தாலும் அன்றிக் கால

ஊழிபெயர்ந் தாலு மன்றிக் கால

ஊழிபெயர்ந் தாலுமதி யுண்மைப் படிக்கே

உறுதி பெயராதுநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

கடல் இடம் மாறினாலும் , மேருமலை அடியோடு பெயர்ந்தாலும் , ஊழியாகிய காலம் பெயர்ந்தாலும் உண்மையான வழியிலிருந்து பெயராமல் உறுதியாக நின்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஆழி - கடல். மேருமலை - இமயமலை.

85. வாயுவினை இரையாக வாங்கி உண்டே

வருடிக்கு நீரினை வாயுள் மடுத்தே

தேயுபிறை குளிர்காய்ந்து வெட்ட வெளியில்

திகைப்பறச் சேர்ந்துநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

வாயுவை இரையாக உண்டு, மழைநீரை வாயில் அடக்கி, தேய் பிறையில் குளிர் காய்ந்து, வெட்டவெளிதனில் திகைப்பின்றி சேர்ந்து நின்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

வருடிக்கும் - மழைபெய்தல். மடுத்தல் - அடக்குதல்.

86. மாசில்கதி வளையிலே மண்டலம் இட்டே

மதியான பெரும்பட மடலை விரித்தே

ஆசில்பரா பரமான ஆதி பாதத்தை

அடுத்தடுத் தேதுதித் தாடாய் பாம்பே.

பொருளுரை :

குற்றமில்லாத நற்கதிக்குரிய மூலாதார வளையில் வளைந்து, மதிப்பதற்குரிய பெரிய படமாகிய மடலை விரித்து, தூய்மையான பராபரமான இறைவனின் திருவடியை அடுத்தடுத்தே துதித்து பாம்பே , நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மாசில் - மாசு+இல்-குற்றமில்லாத. மண்டலம் - வளைந்திருத்தல். ஆசில் - ஆசு+இல்-குற்றமில்லாத. ஆதி - இறைவன். பாதம் - திருவடி.

87. காடுமலை நதிபதி காசி முதலாய்க்

கால்கடுக்க ஓடிப்பலன் காணலாகுமோ

வீடுபெறும் வழிநிலை மேவிக்கொள்ளவே

வேதாந்தத் துறையினின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

காடுகளிலும் , மலைகளிலும் ,தவம் செய்தும் , புண்ணிய தீர்த்தம் என்று கூறப்படும் நதியில் நீராடியும் , காசி முதலான இடங்களில் பெறக் கால்வலிக்க நடந்தும் , ஓடியும் பயன் காண முடியுமோ? முடியாது.

வீடுபேறு அடைவதற்கான வழியை மேவிக்கொள்ள வேதாந்தத் துறையில் நின்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

கடுக்க - வலிக்க. வீடுபேறு - முத்திநிலை.

88. எள்ளளவும் அன்பகத்தில் இல்லா தார்முத்தி

எய்துவது தொல்லுலகில் இல்லை யெனவே

கள்ளப்புலன் கட்டறுத்துக் கால காலனைக்

கண்டு தொழுதேகளித்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

உள்ளத்தில் எள்ளளவும் கூட அன்பு இல்லாதவர்கள் வீடுபேறு அடைவது இல்லை என்பதனை உணர்ந்து, வஞ்சக வழியில் செல்லும் ஐம்புலன்களை அடக்கி, இயமனுக்கு இயமனாகத் திகழும் சிவபெருமானை வணங்கி, மகிழ்ந்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

அன்பகத்தில் - அன்பு+அகத்தில்-அன்பு இருக்கும் உள்ளத்தில். எய்துவது -அடைவது. தொல்லுலகு – பழைமையான உலகம். கள்ளம் - வஞ்சகம். காலகாலன் - சிவபெருமான்

89. சூரியனைக் கண்டபனி தூர ஓடல்போல்

சொந்தபந்தம் சித்தபரி சுத்த தலத்தில்

ஆரியனைக் கண்டுதரி சித்தே அன்புடன்

அகலாமல் பற்றித் தொடர்ந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

சொந்தம் பந்தம் பாசமெல்லாம் சூரியனைக் கண்ட பனி தூர விலகி ஓடுவது போல, தூய்மையான யோகத் தலத்தில் உள்ள தூய்மை நிறைந்த கடவுளைக் கண்டு தரிசித்து அவரைவிட்டு நீங்காமல் தொடர்ந்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஆரியன் - இறைவன்.

90. காந்தம்வலி இரும்புபோல் காசில் மனத்தைக்

காட்சியான வஸ்துவுடன் கலக்கச் சேர்த்துச்

சாந்தமுடன் தோண்டியும் தாம்பும் போலச்

சலியாமற் தொடர்ந்துநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

காந்தமானது இரும்பை வலித்துத் தன் பக்கம் இழுப்பதுபோல, குற்றமற்ற தூய்மையான மனத்தைத் தன் பக்கம் இழுத்துக் காட்சியளிப்பவன் இறைவன். தோண்டியில் கட்டிய கயிறு நெடுந்தூரம் வரை பிரியாது செல்வது போல, இறைவனைத் தொடர்ந்து நின்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

காசில் - காசு+இல் - குற்றமற்ற. வஸ்து - கடவுள். சலியாமல் - பிரியாமல்.

91. உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி

உலகத்தின் மூடர்களுக்கு உண்டோ உணர்ச்சி

புளியிட்ட செம்பில்குற்றம் போமோ அஞ்ஞானம்

போகாது மூடருக்குஎன்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

உளியால் செதுக்கிய கற்சிலைக்கு உணர்ச்சி இல்லை. அதுபோல், மூடருக்கும் உணர்ச்சி இல்லை. செம்பின் களிம்பு (அழுக்கு) புளியால் தேய்த்தாலும் முழுவதும் போகாததுபோல், இறைவன் இல்லை என்னும் அஞ்ஞானம் எவ்வளவு முயன்றாலும் மூடருக்கு முழுதும் போகாது என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மூடர் - அறிவற்றவர். அஞ்ஞானம் - அ+ஞானம் - இறைவனின் இருப்பை அறிய இயலாத அறிவு.

92. திரளான போரில்ஊசி தேடல் போல்முத்தி

சிக்காது தேசஆசார தேசிகர் தம்மால்

அருளான மூலகுரு ஐயர் செயலால்

ஆனந்தம் கொண்டோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

உலகில் ஒழுக்கம் கூறும் பல குருக்களால் வீடுபேறு கிடைக்காது. அது வைக்கோற்போரில் ஊசியைத் தேடுவது போன்றதாகும். எனவே, அருள் வடிவமாக விளங்கும் மூலகுருவான கடவுள் செயலால் ஆனந்தம் பெற்றோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஆசாரதேசிகர் - ஒழுக்கம் போதிக்கும் குரு. ஐயர் - தலைவர் (இங்கு இறைவனைக் குறித்தது)

93. ஏட்டுச்சுரைக் காய்கறிக்குஇங்கு எய்தி டாதுபோல்

எண்திசைதி ரிந்தும்கதி எய்தல் இலையே

நாட்டுக்குஒரு கோயில்கட்டி நாளும் பூசித்தே

நாதன்பாதம் காணார்கள் என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

ஒரு தாளில் தீட்டப்பட்ட கரைக்காயின் படமானது, உணவுக்கான கறி சமைப்பதற்கு உதவாததுபோல, அறைவனை எட்டுத் திசைகளில் தேடி அலைந்தாலும் அவன் அகப்படமாட்டான் அதுமட்டுமன்று, நாட்டுக்கு ஒரு கோயில் கட்டி, அவனைக் காண முயன்றாலும், அவன் தென்பட மாட்டான் என்று கூறி பாம்பே, நீ ஆடுவாயாக.

இறைவனை வெளியே தேடாமல், நம் உள்ளத்தில் தேடி பூசிக்க வேண்டம் என்பது கருத்து.

சொற்பொருள் :

எய்திடாது - பயன்படாது. எண்திசை - எட்டுத்திசை. நாதன் - இறைவன்.

94. தன்னையறிந்து ஒழுகுவார் தன்னை மறப்பார்

தன்னையறியாதவரே தன்னைக் காட்டுவார்

பின்னையொரு கடவுளைப் பேண நினைப்பார்

பேரொளியைப் பேணுவார்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

தன்னை அறிந்தவர், மற்றவரிடம் தன்னைப் பற்றிப் புகழாமல் மறைத்துக் கொள்வார். தன்னை அறியாதவரோ, மற்றவரிடம் தன்னைப் பற்றிப் புகழ்ந்து சொல்லிக் கொள்வார். தன்னை அறிந்தவர்கள் தங்க உடலில் காணும் இறைவனைத் தவிர வேறு ஒன்றைப் பேணி வழிபட எண்ணமாட்டார். பேரொளியையே பேணுவர் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

பேணுவார் - பாதுகாப்பார்.

95. பாலிற்சுவை போலும்எங்கும் பாய்ந்த ஒளியைப்

பற்றுப்பொன் பற்றுவைத்த பான்மை போலே

காலிற்சுழு முனைநின்று கண்டு கொண்டு

களித்து களித்துநின்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

ஒவ்வொரு துளி பாலிலும் சுவையானது பரந்திருப்பதுபோல, இறைவனின் ஒளி எங்கும் பரந்துள்ளது.

தந்கத்தைத் தீயில் அட்டால் அது சுடச்சுட ஒளிர்வதுபோல், நினைக்க நினைக்க அந்தப் பேரொளி சிறக்கிறது. கால்வரை சுழுமுனை நாடி நிற்பதைக் கண்டு கொண்டு, மகிழ்ந்து நின்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

களித்து - மகிழ்ந்து.

96. தேக்கெடுத்தே ஓடும்வானத் தேனை உண்டபின்

தேகபந்தம் கொண்டனமித் தேக வாழ்வினை

ஒக்காளமென்று எண்ணிமிகு மோகை யுடன்நீ

உள்ளந் தெளிந்துநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

வானில் உள்ள அமுதம் தேக்கி நின்று பெருக்கெடுத்து ஓடும்போது உண்டதால் பிறகு உடல் மேல் இருந்தபற்று மிகுந்தது. அது எப்போதும் நிலையானது அன்றுஎண்ணி மேலும் சிவானந்தம் பெற உள்ளந் தெளிந்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

தேகபந்தம் - உடல்பற்று.

97. சதுர்வேதம் ஆறுவகை சாஸ்திரம் பல

தந்திரம் புராணம்கலை சாற்றும் ஆகம்

விதம்வித மானவான வேறு நூல்களும்

வீணான நூல்களேஎன்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

நான்கு வேதங்களும், ஆறுவகை சாஸ்திரங்களும், புராணங்கள் கலைகள் சாற்றும் ஆகமங்கள். இவ்வாறு பலப்பலவிதமாக உயர்ந்த வேறு நூல்களும் பயனற்ற நூல்களே என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

சதுர்வேதம் - நான்கு வேதம். அவையாவன: 1.ரிக், 2.யசூர், 3.சாமம், 4.அதர்வணம் என்பனவாகும். ஆகமம் - புனித நூல்.

98. சமயபேதம் பலவான சாதி பேதங்கள்

சகத்தோர்க்கே யல்லாதுசற் சாதுக் களுக்கோ

சிமயத்தில் ஏறினபேர் சித்தம் மாறுமோ

சித்தர்சித தாந்தம் தேர்ந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

சமய வேற்றுமை மற்றும் சாதி வேற்றுமை போன்றவை உலக மக்களுக்கே உண்டாகும். நல்ல சாதுக்களுக்கு அவை உண்டாகா. மலை போன்று உயர்ந்த பேரறிவு பெற்றவர்களுக்குச் சிந்தனை மாறுவதில்லை. சித்தர்களின் சித்தாந்தத்தைத் தேர்ந்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

சகத்தோர் - உலகமக்கள். பேதங்கள் - வேற்றுமைகள். சிமயம் - மலையுச்சி.

99. பூசைசெய்த தாலேசுத்த போதம் வருமோ

பூமிவலஞ் செய்ததனால் புண்ணியம் உண்டோ

ஆழசயற்ற காலத்திலே ஆதி வஸ்துவை

அடையலாம் என்றுதுணிந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

பூசைமட்டும் செய்வதால் சுத்த ஞானம் உண்டாகுமா? எனில் உண்டாகாது. பூமியையே சுற்றி வந்தாலும் புண்ணியம் உண்டாகுமா? எனில் உண்டாகாது. ஆசைகள் அனைத்தும் துறந்துவிட்ட பொழுதிலே இறைவனை அடையலாம் என்று துணிந்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

போதம் - ஞானம். ஆதிவஸ்து - இறைவன்.

100. மூலவேர் அறிந்துகொண்டால் மூன்று உலகமும்

முன்பாகவே கண்டுநித்ய முத்தி சேரலாம்

சாலவேர நிந்ததாலே தான்பயன் உண்டோ

சகத்தைப்பொய் யென்றுதெளிந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

மூலாதாரத்தின் வேர்ப்பகுதியை அறிந்தால் மூன்று உலகங்களையும் முன்னதாகவே அறிந்து என்றும் அழியாமல் இருக்கும் வீடுபேற்றையும் பெறலாம். இதைத் தவிர வேறுபட்ட அடிப்படையை மிகவும் நன்றாக அறிந்திருந்தாலும் அதனால் பயனில்லை. எனவே, இவ்வுலகத்தையே பொய் என்று தெளிந்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

நித்யம் - நிலையானது. சகம் - உலகம்.

101. சகத்துஅனாதி யென்றிடாது தான னாதியார்

சமைந்ததென் றுரைப்பார்கள் சத்தை யறியார்

மகத்துவ நிலைகற்ப வன்மை யல்லாது

மற்றும் வன்மை யில்லையேயென்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

சகத்தை அனாதி என்று கொள்ளாமல் தான் மட்டுமே அனாதி எனச் சமைந்ததைக் கூறுவர், இறைவனை அறியார், மகத்துவமான கற்ப காலத்துக்கும் நிலைபெற்றிருக்கும் வலிமையன்றி பிற வலிமை வலிமையே ஆகாது என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

சத்து - இறைவன். வன்மை - வலிமை.

102. ஆயிரத்தெட்டு இதழ்வீட்டி லமர்ந்த சித்தன்

அண்டமெல்லாம் நிறைந்திடும் அற்புதச் சித்தன்

காயமில்லாது ஓங்கிவளர் காரணச் சித்தன்

கண்ணுள்ஒளி ஆயினான்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

ஆயிரத்து எட்டு இதழ்த்தாமரை உள்ள (கபாலத்தில்) சகஸ்ராரத்தில் உள்ள இறைவன் உலகங்கள் முழுவதும் நிறையும் அற்புத இறைவன், உடல் என்று ஒன்று இல்லாலே ஓங்கி வளரும் காரண இறைவன், அவன் கண்ணுள் ஒளியாய் இருந்தான் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

அண்டம் - உலகம். காயம் - உடல்.

103. நாற்பத்துமுக் கோணநிலை நாப்ப ணதாக

நாடுமக்க ரச்சொரூப நாய கன்தனை

மேம்படுத்திக் கொண்டால்அந்த மேலுலகெலாம்

மெல்லடிக்குத் தொண்டேயாம் என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

நாற்பத்து மூன்று கோணங்களின் நடுவில் உள்ள இறைவனை, மந்திரத்தால் நாடக் கடைக்கும் சொரூபம் உடையவனை, நம் தலைமேல் இருத்திக்கொன்டால், மேல் உலகம் அனைத்தும் அவன் காலடியில் தொண்டு செய்ய வந்து சேரும் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

ஸ்ரீ சக்கரம் என்பது சக்திக்குரியது. திருவம்பலச் சக்கரம் என்பது சிவபெருமானுக்கு உரியது. இரண்டிலும் தனித்தனியே 43 அடுக்கடுக்கான முக்கோணங்கள் உள்ளன என்பதை அறிக.

சொற்பொருள் :

நாப்பண் - நடுவில். அக்கரம் - மந்திரஎழுத்து. நாயகன் - தலைவன் (இறைவன்).

104. கண்டவரகள் ஒருக்காலும் விண்டி டார்களே

விண்டவரகள் ஒருக்காலும் கண்டி டார்களே

கொண்டகோல முள்ளவர்கள் கோன்நிலை காணார்

கூத்தாடிக்கூத் தாடியேநீ யாடாய் பாம்பே.

பொருளுரை :

இறைவனைக் கண்டவர்கள் சொல்லமாட்டார்கள். சொல்பவர்கள் கண்டதில்லை. பல உலகியல் கோலம் உடையவர்கள், தலைவனாகிய இறைவன் நிலையறியார்கள். எனவே, கூத்தாடிக் கூத்தாடியே பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

கோன் - தலைவன், இறைவன்.

105. ஆடுகலைக் குச்சுக்குள்ளே ஆடும்ஒருவன்

அயல்வீடு போகுமுன்னே அரண்கோ லிக்கொள்ளு

வேறுபட்டால் அவன்தனை மீட்டல் அரிதே

மேவிமுன்னே விடாதுகொண் டாடாய் பாம்பே.

பொருளுரை :

அறுகோணம் கொண்ட அநாகதச் சக்கரத்தில் ஆடும் ஒருவன், அதை விட்டு அயல்வீடு செல்லும் முன்பே அரண் அமைத்து தடுத்துவிடு. வேறுபட்டால் அவனை மீட்பதும் கடினமாகிவிடும். எனவே, விடாது முயன்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

அரண் - பாதுகாப்பு. ஆறுகலைக்குச்சு - அறுகோணம் கொண்ட அநாகதச் சக்கரம்.

106. எண்ணரிய புண்ணியங்கள் எல்லாஞ் செய்துமென்

ஏகன்அடி நெஞ்சமதி லெண்ணா விடிலே

பண்ணரிய தவப்பயன் பத்தி யில்லையேற்

பாழ்படு மென்றுதுணிந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

கணக்கற்ற அரிய புண்ணியங்கள் செய்தாலும், இறைவனின் திருவடியை உள்ளத்தில் எண்ணாவிட்டால் பயன் இல்லை. ஆற்றுவதற்கு அரிய தவமும், சிறந்த பக்தியும் இல்லாவிட்டால் அனைத்துமே வீணாகிவிடும் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

எண்ணரிய - கணக்கற்ற. ஏகன் - இறைவன். பண்ணரிய - செய்வதற்கு அரிய.

107. எவ்வுலகும் சொந்தமதாய் எய்தும் பயன்என்

எங்கள்ஆதி பதாம்புயம் எண்ணாக் காலையில்

இவ்வுலக வாழ்வுதானும் இன்றே அறும்என்று

எண்ணிக்கர்த்தன் அடிநினைந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

எங்களுடைய இறைவனின் திருவடித் தாமரையை எண்ணாதபோது, அனைத்து உலகங்களையும் சொந்தமாக எண்ணி என்ன பயன்? ஒரு பயனும் இல்லை. இவ்வுலக வாழ்க்கையை இன்றே விடுபடுவதாக எண்ணி இறைவனின் திருவடிகளை நினைத்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

எய்தும் - அடையும். பயன்என் - பயன் என்ன? எண்ணாக்காலை - நினைக்காத பொழுது அறும் - விடுபடும். கர்த்தன் - இறைவன்.

108. மணக்கோலம் கொண்டுமிக மனம் மகிழ்ந்துமே

மக்கள்மனை சுற்றத்தோடு மயங்கி நின்றாய்

பிணக்கோலம் கண்டுபின்னும் துறவா விட்டால்

பிறப்புக்கே துணையாம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

திருமணக்கோலம் கொண்டு மிகவும் மனம் மகிழ்ந்து மக்கள், மனைவி, உறினர் எனக் குழம்பி நின்றாய். இங்ஙனம் வாழும் மற்ற மனிதர்கள் அனைவருமே இறப்பதைக் கண்டும்கூட இவற்றைத் துறக்காவிட்டால் மீண்டும் பிறக்க நேரிடும் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மக்கள் - பிள்ளைகள். மனை – மனைவி. சுற்றம் - உறவினர்.

109. பிறப்பையும் இறப்பையும் அறுத்து விடயான்

பெருமருந்து ஒன்றுசொல்வேன் பெட்புடன் கேளாய்

திறப்புடன் மனப்பூட்டும் சிந்தைக் கதவும்

திறந்திடும் வகையறிந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

பிறப்பு இறப்பு ஆகியவற்றை அறுத்திட நான் பெரிய மருந்தொன்று சொல்கிறேன் கேட்பாயாக. மனத்தின் பூட்டையும், சிந்தையின் கதவையும் திறக்கும் வகையறிந்து பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

பெட்புடன் - கவனமாக. அறுத்து - நீக்கி.

110. இறந்தவர் ஐவர்அவர் இட்ட மானவர்

எய்தும்அவர் இறந்தார்என்று எல்ல வர்க்கும்சொல்

மறந்தவர் ஒருவர்என்றே மண்ணில் உள்ளோர்

வகையறிந்திடவே நின்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

ஐம்புலன்களை அடக்கியவர்கள்தான் அனைவராலும் விரும்பப்படுபவர்கள் - ஐம்புலன்களை அவற்றின் போக்கில்விட்டு, அவைதரும் இன்பங்களை நுகர்பவர்கள் இறந்தவர்களே என்று அனைவர்க்கும் சொல். இதை மறந்த ஒருவரே உலகில் வாழ்வார் - இந்த அருவரையும் அறிந்திடு என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

இட்டமானவர் - விரும்பத்தக்கவர். ஐவர் - ஐம்புலன்கள். அவையாவன: 1.கண், 2.காது, 3.மூக்கு, 4.நாக்கு, 5.தோல் என்பன. எய்தும் - அடையும்.

111. ஆகார முதலிலே பாம்ப தாக

ஆனந்த வயலிலே படம்வி ரித்தே

ஊகார முதலிலேஒத்து ஒடுங்கி

ஓடி வகாரத்தி னாவை நீட்டிச்

சீகாரங் கிடந்ததோர் மந்தி ரத்தைச்

சிதப்பிட டாரனார் போதஞ் செய்ய

மாகாரப் பிறப்பையும் வேர் அறுத்து

மாயபந்தம் கடந்தோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

ஆகாரம் - ‘அ’கரம்

ஊகாரம் - ‘உ’கரம்

மாகாரம் - ‘ம’கரம்

வகாரம் - ‘வ’கரம்

சீகாரம் - ‘சி’கரம்

‘ஓம் நமசிவாய’ என்ற மந்திரம் பிறப்பை அறுக்க வல்லது. இம்மந்திரத்திற்குரிய இடங்களைத் தியானத்தின் மூலம் செபித்துப் பிறப்பை அறுத்து, மாயையின் கட்டிலிருந்து விடுபடுவோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மாயாந்தம் - மாயைக்கட்டு.

112. தந்திரம் சொல்லுவார் தம்மை அறிவார்

தனிமந்தி ரம்சொல்லுவார் பொருளை அறியார்

மந்திரம் செபிப்பார்கள் வட்ட வீட்டினுள்

மதிலினைச் சுற்றுவார் வாயில் காணார்

அந்தரம் சென்றுமே வேர்பி டுங்கி

அருள்என்னும் ஞானத்தால் உண்டை சேர்த்தே

இந்த மருந்தினைத் தின்பீ ராகில்

இனிப்பிறப்பு இல்லையென்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

பல்வேறு சமய நூல்களைக் கற்றுச் செல்பவர் ஆன்மாவை அறியார், தனி மந்திரம் சொல்பவர் அதனுடைய பொருளை அறியார், உடலிலேயே மந்திரமும் சொல்வார். இங்ஙனம் செய்யும் செயலானது. மதிலை மட்டும் சுற்றி, வாயிலைச் சென்று போய்ச் சேர வழி தெரியாத செயலாகும்.

உச்சிவரை உடம்பில் ஒளியோடு சென்று மூலாதாரத்து வேரை அறுத்தால், அருளால் ஞானம் கிடைத்ததும் கடவுளையே கருதி இருந்தால் இனிப்பிறப்பு என்பதே இல்லை என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

தந்திரம் - சமயநூல். அந்தரம் - உச்சி. ஞானம் - மெய்யறிவு.

113. களிமண்ணி னால்ஒரு கப்பல் சேர்த்தே

களமான பாய்மரம் காண நாட்டி

அளிபுலந் தன்னையே சுக்கான் ஆக்கி

அறிவுஎன்னும் ஆதாரச் சீலை தூக்கி

வெளியென்னும் வட்டத்தே உள் அடக்கி

வேதாந்தக் கடலினை வெல்ல ஓட்டித்

தெளிவுறு ஞானியார் ஓட்டும் கப்பல்

சீர்பாதம் சேர்ந்ததுஎன்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

களிமண்ணால் ஒரு கப்பல் செய்து, கனமான பாய்மரத்தைக் காறும்படி அதில் பொருத்தி, இரங்கும் ஐம்புன்களையே அக்கப்பலை திசை திருப்பும் சுக்கானாக்கி, அறிவு என்னும் ஆதாரமான சீலையைக் கட்டி, ஆகாயவெளி என்னும் கடலில் செலுத்தி, வேதாந்தமாகிய யோகமாகிய கடலை வெல்வோம் என்று தெளிவுறும் ஞானியர் ஓட்டும் கப்பல் இறைவனின் பெருமை பொருந்திய திருவடியைச் சேர்ந்தது என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

அளி இரங்கும் - தன்மையுள்ள. சுக்கான் - துடுப்பு. சீர்பாதம் - பெருமை பொருந்திய திருவடி.

114. உள்ளத்துக்கு உள்ளே உணர வேண்டும்

உள்ளும் புறம்பையும் உணர வேண்டும்

மெள்ளக் கனலை எழுப்ப வேண்டும்

வீதிப் புனலிலே செலுத்த வேண்டும்

கள்ளப் புனலைக் கடிந்து விட்டுக்

கண்ணுக்கு மூக்குமேற் காண நின்று

தெள்ளு பரஞ்சோதி தன்னைத் தேடிச்

சீர்பாதம் கண்டோம் என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

உள்ளத்திற்கு உள்ளேயே உணர்வை வைத்து , உள்ளேயும் வெளியேயும் அறிந்து, மூலாதாரத்தில்உள்ள குண்டலினி நெருப்பை எழுப்பி, நாடிகளாகிய வீதிகள் தோறும் அது பாய்ந்து செல்லும் படி புனல் போல் செலுத்தி, கள்ளப்புலன்களை அடக்கி, கண்ணுக்கும் மூக்குக்கும் மேல் புருவங்களின் நடுவே பரஞ்சோதியாகிய இறைவனைக் கண்டு அவருடைய பெருமை பொருந்திய திருவடிகளை சேர்வோம் என்று பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

புறம் - வெளியே. கனல் - குண்டலினி நெருப்பு. சீர்பாதம் - பெருமை பொருந்திய திருவடி.

115. ஓங்காரக் கம்பத்தின் உச்சி மேலே

உள்ளும் புறம்பையும் அறிய வேண்டும்

ஆங்காரக் கோபத்தை அறுத்து விட்டே

ஆனந்த வெள்ளத்தைத் தேக்கிக் கொண்டே

சாங்கால மில்லாமல் தாணு வாடே

சட்டதிட்ட மாய்ச்சேர்ந்து சாந்தமாகத்

தூங்காமல் தூங்கியே சுகம் அடைந்து

தொந்தோம் தொந்தோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

ஓம்கார மந்திரத்தை உச்சி வரை ஒரு கம்பம் போல் உள்ளும் புறமும் செலுத்தி, அகந்தை எனும் கோபத்தை முழுவதுமாக நீக்கி, அப்பொழுது வரும் ஆனந்த வெள்ளத்தை தேக்கி, இறப்பே வராதபடி இவ்வுடலை உய்த்து, நியதிப்படி வழுவாமல் சாந்த குணத்தோடு, தூங்காமல் தூங்கும் சமாதி நிலையில் சுகம் கண்டு, ‘தொந்தோம்’என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஆங்காரம் - அகந்தை, ஆணவம். சாங்காலம் - இறப்புக்காலம். தாணு – சிவன்.

116. விரகக் குடத்திலே பாம் படைப்போம்

வேதாந்த வெளியிலே விட்டே யாட்டுவோம்

காரணங்க ளைப்பிடுங்கி இரைகொ டுப்போம்

காலக் கடுவெளிநின் றாட்டு விப்போம்

துரகம்தனில் ஏறித் தொல்லுலகம் எங்கும்

சுற்றிவலம் வந்து நித்ய சூட்சமம் கண்டும்

உரையற்ற மந்திரம் சொல்லி மீட்போம்

ஒரு நான்கும் பெற்றோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

சமாதி நிலை மூலம் குண்டலினிப் பாம்பை மேலேற்றி ஆர்வம் என்னும் குடத்திலே அதை இணைப்போம். யோக சாதனையில் மூழ்குவோம். காரணமான வினைகளைப் பிடுங்கி அதற்கு இரையாக்குவோம். காலமெனும் கடுவெளியில் அப் பாம்பை ஆட வைப்போம்.

குதிரையில் ஏறி உலகம் முழுவதையும் வலம் வருவோம். நிலைத்த சூட்சுமம் காண்போம். வாய்விட்டு ஒளிக்காத மந்திரத்தை மௌனமாக மனதிற்குள்ளாகவே உச்சரிப்போம். அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நான்கு உறுதிப் பொருட்களும் பெற்றோம். எனினும் நான்காவதான வீடுபேற்றையே பெரிதும் விரும்பினோம். என பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

துரகம் - குதிரை. தோல்லுலகம் -பழமையான உலகம். நித்யம் - நிலையானது. ஒரு நான்கு - அறம், பொருள், இன்பம், வீடுபேறு (அல்லது) சாமீபம், சாலோகம், சாரூபம், சாயுச்சியம் என்பன.

117. காயக் குடத்திலே நின்ற பாம்பைக்

கருணைக் கடலிலே தியங்க விட்டு

நேயச் சுழுமுனை நீடு பாய்ச்சி

நித்யமான வஸ்துவை நிலைக்க நாடி

மாயப் பெருவெளி தன்னில்ஏறி

மாசற்ற பொருளினை வாய்க்கத் தேடி

ஆயத் துறைகடந்து அப்பாற் பாழின்

ஆனந்தம் சேர்ந்தோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

உடலாகி குடத்திலே உள்ள குண்டலினியைக் கருணைக் கடலிலே விடுவோம். அன்பாய்ச் சுழுமுனை நாடியில் அதனைப் பாய்ச்சுவோம். நிலைத்தப் பொருளாகிய இறைவனை நிலையாக எண்ணுவோம். மாயமாகிய பெருவளி தன்னிலே ஏறி, குற்றமற்ற தூய பொருளைக் கிட்டும்படித் தேடி அங்குள்ள துறைகளைக் கடந்து அப்பால் உள்ள பாழ் எனும் இடத்தில் ஆனந்தம் பெறுவோம் என பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

காயம் - உடல். நேயம் - அன்பு.

118. மூலத் தலத்திலே நின்ற கருத்தை

முற்றுஞ் சுழுமுனை தன்னில் ஊடே

மேலத் தலத்திலே விந்து வட்டம்

வேலை வழியிலே மேவி வாழும்

பாலத் திருத்தாய் கருணை யதனால்

பாகதி ஞானசொ ரூபமாகிய

ஆலச் சயனத்து மாலுடன் நின்றே

ஆனந்தம் சேர்ந்தோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

மூலாதாரத்தில் நின்ற எண்ணமாகிய குண்டலினியை முழுவதுமாகச் சுழுமுனை நாடியின் உள்ளே செலுத்தி, மேல்தலமாகிய கபாலத்தில் விந்து வட்டமாகத் திகழச் செய்து, அங்குள்ள பாலத்தில் கருணையின் வடிவமாய் இருக்கும் ஞானசொரூபமாக நாமும் ஆகி, ஆலிலையில் படுத்துறங்கும் திருமால்போல ஆனந்தம் கொண்டோமென்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஆல் - ஆலஇலை. சயனம் - உறக்கம். மால் - திருமால்.

119. புலனைந்து வீதியில் வையாளி பாயும்

புரவி எனும்மனதை ஓருமைப் படுத்தி

மலபந்த உலகம் கடந்த தாலே

மன்னுகுரு பாதத்தின் நிலையை நாடித்

தலம்ஐந்து பூலோகம் கடந்த தாலே

சந்திர மண்டலமும் கடந்த தாகும்

அலமந்து பூலோகக் கடலை நீக்கி

ஆனந்த மாகிநின்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

ஐம்புலன்கள் எனும் வீதியில் அவற்றை வென்ற வீரனாக வந்து, குதிரைபோல் விரைந்து செல்லும் மனதை ஒருமுகப்படுத்தி, மலம் சார்ந்த உலகங்கள் கொண்ட இவ்வுடலைக் கடந்து, குருபாதமாகிய புருவமத்தியின் நிலையை உணர்ந்து, பூலோகம் உட்பட ஐந்து தலங்களையும் கடந்த தாலே, தலையில் சந்திர மண்டலமாகிய அமுதம் ஊறும் தலத்தைக் காணலாம். இங்ஙனம் இவ்வுடலாகிய பூவுலக உணர்வு முழுவதும் கடந்தோம். இதுவே ஆனந்தம் என பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

வையாளி - புலன்களை வென்ற வீரன். புரவி - குதிரை. மன்னும் - நிலைபெறும்.

120. குருவென்னும் ஆசானின் உரு எடுத்துக்

குறியான ஞானத்தின் பாக்கியாக்கி

அருளென்னு அருளையே உண்டை யாக்கி

ஆனந்த மாகவே அதைக்க டந்தே

மருள்என்னும் மாதர்மன நெறியைத் தொட்டு

வாங்காமல் எரிந்திட நெட்டை யிட்டு

பருவளைக் குள்ளேயே பட்டது என்றே

பற்றானைக் பற்றிநின் றாடாய் பாம்பே.

பொருளுரை :

குரு எனும் ஆசானின் உருவத்தை எடுத்து, குறியான ஞானத்தின் பாக்கியாக அதனைக் கண்டு, பேரருளையே உருண்டையாக்கி, ஆனந்தமாக அதனையம் கடந்து, மயக்கம் என்னும் பெண்கள் மனஉணர்வையும் தொட்டு, அது தொடராமல் எரியச் செய்து, பெரிய வளையாகிய நாடிக்குள்ளே போகச் செய்து, அனைத்துப் பற்றுகளினின்றும் நீங்கிய இறைவனின் திருவடியைப் பற்றிக் கொண்டு பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மருள் - மயக்கம். மாதர் - பெண்கள். நெறி - வழி. பற்றான் - எப்பற்றும் இல்லாத இறைவன்.

121. கன்னான் குகையிலே கால்ம றிப்போம்

கருமான் உலையிலே தீயை மூட்டுவோம்

சொன்னார் தலையிலே பொன்னை யாக்குவோம்

சுருதி யருகல்வி ஒப்பஞ் செய்வோம்

மின்னார்கள் பாசத்தை விட்டே யெரிப்போம்

மெய்ப்பொருட் குறிகண்டு விருப்பை யடைவோம்

பன்னாதே பன்னாதே சும்மா இருந்து

பராபரம் சேர்ந்தோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

மூக்கின் வழியாகச் செல்லும் இடம்வலமாக மாற்றி விடுவோம். மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினித் தீயை மூட்டுவோம். மார்பின் நடுவில் உள்ள அநாகத ஆதாரத்தைப் பொன்னிறமாக்குவோம்.

வேதம் கூறும் கல்விக்கு இணைகாக யோகம் செய்வோம். மின் போலும் இடையுடைய பெண்ணின் மோகத்தை எரிப்போம். உண்மைப் பொருளை கடவுளின் குறிப்பறிந்து அவர் விருப்பப்படி செல்வோம். வேறு எதுவும் செய்யாமல், அமைதியாக இருந்து பராபரத்தைச் சேர்ந்தோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

கால் - காற்று. மின்னார்கள் - பெண்கள். பராபரம் - இறைவன்.

122. சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்

சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்

வீதிப் பிரிவினிலே விளையா டிடுவோம்

வேண்டாத மனையினில் உறவு செய்வோம்

சோதித்து உலாவியே தூங்கி விடுவோம்

சுகமான பெண்ணையே சுகித்திருப்போம்

ஆதிப் பிரமர்கள் ஐந்து பேரும்

அறியார்கள் இதையென்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

சாதிப் பிரிவுகளைக் சுவடில்லாமல் அழிப்போம்: நாடிகள் சந்திக்கும் ஆதாரங்களில் தீயைக் கோல்மாதிரி நீள வைப்போம். வீதிப் பிரிவாகிய நாடிகளில் விளையாடுவோம். வேண்டாதவர்கள் வீடுகளில் உறவை வைத்துக்கொள்ளமாட்டோம். சிவானந்தம் எனும் பெண்ணையே சுகமாகக் கொள்வோம். ஆதியான ஐந்து புலன்களும் அறியமாட்டார்கள் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மனை - வீடு. ஆதிப்பிரமர்கள் - ஜம்புலன்கள்.

123. நெட்டெழுத்து அதனிலே நிலைபி டித்து

நீங்கா எழுத்திலே வாலை முறுக்கி

விட்டவ் வெழுத்திலே படம்வி ரித்து

விண்ணின் வழியிலே மேவி யாடிப்

பட்ட எழுத்தையும் பதிந்தி ருப்போம்

பன்னிரண் டாமெழுத்தினிற் பன்னிக் கூடித்

திட்டமுடன் எமக்கருள் தேசிக னார்தம்

சீர்பாதஞ் சேர்ந்தோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

நெட்டெழுத்து - அ

நீங்கா எழுத்து - உ

விட்ட எழுத்து – ம்

வயிறு, மார்பு, உதடு வரை வரும் குண்டலினி சக்தி இதன் பின் விரிந்து செல்வதால், படம் விரித்து விண் வழியாகத் தலைக்குள் ஓடி, தலையில் 6 விரல் வரை செல்வதைப் பதிய வைத்துக் காத்திருப்போம். அதன் மேல் 12 விரலில் குண்டலினி இறைவனைக் கூடி, எமக்கு அருள் செய்ய வழிகாட்டும் அந்தக் குருவின் பெருமை பொருந்திய திருவடி சேர்ந்தோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

தேசிகனார் - இறைவன். சீர்பாதம் - பெருமை பொருந்திய திருவடி.

124. ஊசித்துளைக் குடத்தினிற் பாம்பை அடைப்போம்

உலகெலாம சுற்றி உலாவி வருவோம்

மாசுள்ள பிறவியை மறந்தி ருப்போம்

மனம்ஒத்த வெளியிலே விட்டே யாட்டுவோம்

மாசுப் புலன்களை இரைகொ டுப்போம்

மனமுற்ற உச்சியில் ஏறி ஆடுவோம்

பேசும் எழுத்தையும் விழுங்கி விடுவோம்

பிறப்பு இறப்பு அற்றோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

ஊசியின் துளை அளவேயான சுழுமுனை நாடியின் வாய் மிகவும் சிறியது. அது இருக்கும் மூலாதாரக் குடத்தில் குண்டலினிப் பாம்பை அடைத்து வைப்போம். அங்கிருந்து அது புறப்பட்டால் உடல் சுற்றி வருவோம்.

பல்வேறு குற்றங்குறைகளை உடைய பிறவியை மறந்து விடுவோம். மனம் போகும் வழியெல்லாம் குண்டலினியை விட்டு ஆட்டுவோம்.

புலன்களை அதற்கு இரையாகத் தருவோம். மனமுற்ற தலை உச்சியில் ஏறி ஆடுவோம்.

பேசும் எழுத்தாகிய ‘உ’ என்னும் எழுத்தையும் மவுனமாக மனதில் உச்நரிப்போம். இதனால் பிறப்பும் இறப்பும் ஒழித்தோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

மாசுப்புலன்கள் - வஞ்சகப் புலன்கள்.

125. ஆணிக் குடத்திலே பாம்ப டைப்போம்

அக்கினிக் கோட்டைமேல் ஏறிப் பார்ப்போம்

மாணிக்கத் தூணின்மேல் விட்டே யாட்டுவோம்

மனம்வாக்குக் காயத்தை இரைகொ டுப்போம்

நாணிற் கயிற்றையும் அறுத்து விடுவோம்

நமன்அற்ற நாதன்பதம் நாடியே நிற்போம்

ஏணிப் படிவழிகண்டு ஏறி விடுவோம்

யாரும்இதை அறியார்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

ஆணிக்குடம் ஆகிய மூலாதாரத்தில் பாம்பை அடைத்து வைப்போம். அக்கினிக் கோட்டையாகிய மணிப்பூரகம் மீது ஏறிப் போக விடுவோம். மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றையும் அதற்கு இரையாகக் கொடுப்போம். நிராதார யோகம் தான் நாணிற் கயிற்றை அறுக்கும் பகுதிவாகும். இதனால் உடலின் உணர்வு நீங்கி இயமபயம் வராது.

இறைவனின் திருவடியைப் பற்றி இருப்போம். நாடிகளில் இச்சக்தி தானே ஏறுவதை ஏணிப்படி என்கிறார் பாம்பாட்டிச் சித்தர். இங்ஙனம் ஏறுவதை மற்றவர் அறியார் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

காயம் - உடல். நமன் - இயமன். நாதன் - இறைவன்.

126. வடக்கும் கிழக்குமாக நூலை யிழைப்போம்

மற்றுஞ் சூழலிலே பாவு பூட்டுவோம்

நடக்கும் வழியினிலே உண்டை சேர்ப்போம்

நடவா வழியினிலே புடவை நெய்வோம்

குடக்குக் கரையினிலே கோலைப் போடுவோம்

கொய்ததை எங்குமே விற்று விடுவோம்

அடக்கியே ஏகத்துளே வைக்கவும் வல்லோம்

ஆதிபதம் கண்டோம்என்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

உச்சிப் பக்கமாகவும், உடலின் முன் பின்னாகவும் குண்டலினி செல்வதை நன்கு கண்காணித்து வருவதை நூல் இழைப்பூட்டிப் பாவு பூட்டி உண்டை நூல் விட்டுப் புடவை நெய்வோம் என்று பரிபாஷையில் கூறினார்.

மேற்கு பக்கமாக முதுகினுள் தீச்சுடர் கோல் விடப்படும் என்பதை அறிந்து கொள்க.

நெசவு நெய்யும் போது அறுபடும் நூலைத் தூக்கி வீசுவது போல, யோகம் செல்லாத இடத்தைக் கைவிடுவோம். இவ்வாறாக இறைவன் திருவடி கண்டோம் என்று பாம்பே நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

குடக்கு - மேற்கு. ஆதிபதம் - இறைவனின் திருவடி.

127. சூத்திர குடத்திலே பாம்பை அடைப்போம்

சுழுமுனைக்கு உள்ளேயே சுகித்திருப்போம்

பாத்திரம் கொண்டுமே பலிஇ ரப்போம்

பத்தெட்டு மூன்று படி கடந்தோம்

ஊத்தைச் சடலத்தினை புடமே யிடுவோம்

உளவ னெமக்குநல் லுறுதி சொல்லப்

பார்த்துரை யிதன்மெய் பலிக்க எண்ணிப்

பதனம் பதனமென்று ஆடாய் பாம்பே.

பொருளுரை :

மூலாதாரத்தில் பாம்பை அடைப்போம். சுழுமுனை நாடியில் அது செல்லுமாற சுகம் காண்போம். ஆறு ஆதாரங்களிலும் குண்டலினி நிறையுமாறு வேண்டுவோம். 10+8 = 18. தலைக்கு மேல் 18 நெல் உயரம் படிகளாய்க் கடப்போம். அழியும் இவ்வுடலைப் புடமிட்டு உள்ளே உள்ள இறைவன் எமக்கு உறுதி சொல்லப் பார்த்துப் பக்குவம் செய்தோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.

சொற்பொருள் :

ஊத்தைச்சடலம் - அழியும் உடல். பதனம் - பக்குவம்.

128. மவ்வக் குடத்திலே பாம்ப டைப்போம்

மணிவட்ட வாசியை வாரி யுண்போம்

வவ்வக் குடங்களைத் தள்ளி விடுவோம்

வக்கிர சொர்ப்பனந் தாண்டி விடுவோம்

பவ்வ வெளியிலே விட்டே வாட்டுவோம்

பஞ்ச கருவியைப் பலிகொ டுப்போம்

சிவ்வுரு வாகியே நின்றோம் என்றே

சீர்பாதம் கண்டுதெளிந்து ஆடாய் பாம்பே.

பொருளுரை :

'ஓம்' - என்னும் மூலமந்திரத்தில் 'ம்' என்பது வாய் வரை நிற்கும். அங்கே குண்டலினிப் பாம்பை அடைப்போம். அப்போது மணிப்பூரகமாகிய தொப்புளில் இருக்கும் நெருப்பைப் பிராணாயாமம் மூலம் வெளிப்படுத்துவோம்.

சூனியமான மூக்குப் பகுதியைத் தாண்டிவிடுவோம். தலையின் உட்பகுதி கடலாகும். அதில் குண்டலினி சக்தியை நிறைப்போம். இதற்கென ஐம்புலன்களை அடக்குவோம். (இரையாகத் தருவோம்)

இப்போது 'சி' எனும் சிவ அக்கினியாகவே, உடல் நடுவே முழுவதும் ஒளித்தூணாக உள்ளது. இதனால் இறைவனின் பெருமை பொருந்திய திருவடியைக் கண்டு தெளிவோம் என்று பாம்பே, நீ ஆடுவாயாக.